www.padippakam.com

அக்டோபர் 2005

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



அமெரிக்க மாயையைக் கலைத்த கத்ரீனா



## பரவுகிறது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம்!

படிப்பகம்

www.padippakam.com

# "ஜாட்" சாதிவெறி பெருநெருப்பில் கருகும் தலித் மக்களின் வாழ்வு

அரியானா மாநிலத்தில் ஜாட் சாதி வெறிக் கும்பல் தாழ்த்தப்பட்டோரின் குடியிருப்பு பகுதியில் புகுந்து பகற் கொள்ளையில் ஈடுபட்டதோடு, அப் பகுதியையே கொளுத்திச் சாம்பல் மேடாக்கியது.

அரியானா மாநிலத்தின் பாணிபட் மாவட்டத்தில் உள்ள நகரம், கோஹனா. அந்நகரத்தின் நெரிசல் மிகுந்த வர்த்தகப் பகுதியில் உள்ளது தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் வால்மீகி மற்றும் ஆர்யா என்ற இரு குடியிருப்புப் பகுதிகள். கடந்த ஆகஸ்ட் மாதம் 31-ந் தேதி மதியம் பட்டப்பகலில் 1500-க்கும் மேற்பட்ட ஜாட் சாதிவெறிக் கும்பல் ஒவ்வொரு வீடாகச் சென்று கொள்ளையடித்தது. முடிவில், குடியிருப்புகளின் மீது பெட்ரோல் டின்களை வீசி மொத்தமாகக் கொளுத்தியது.

தாழ்த்தப்பட்டோரின் குடியிருப்புகளில் இருந்த இரண்டு சக்கர வாகனங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், சமையல் எரிவாயு சாதனங்கள், நவீன மின்னணுக் கருவிகள் மற்றும் கணிப்பொறிகள் ஆகியவற்றைக் கூச்சமின்றிக் கொள்ளையடித்ததோடு, மாடி வீடுகளை தூக்கிச் செல்லமுடியவில்லையே என்ற ஆத்திரத்தில் அவற்றுக்குள் இருந்த மரச்சாமான்களையும் சேர்த்து தீ வைத்தது.

"என்ன இது? தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் குடிசை என்றால், சட்டியும் பானையும் சாம்பல் அடுப்பும்தானே இருக்கும்? ஆனால், இங்கு சலவை இயந்திரங்கள், கணிப்பொறிகள் மற்றும் எரிவாயு சிலிண்டர்கள் - இவற்றோடு அழகான மாடி வீடுகள் கட்டிக் கொண்டு 'கீழ்சாதி'க் கூட்டம் வசிப்பதா? அவர்கள் அனுபவிக்க நாம் வேடிக்கைப் பார்ப்பதா? மலத்தைச் சுமக்கும் தோட்டி கும்பல் மச்சு வீட்டில் வாழ்வதா?" என்ற உயர்சாதி கொழுப்பு ஜாட் சாதிவெறியர்களிடம் கொழுந்து விட்டு எரிந்தது.

விளைவு; தலித் மக்களின் 50 ஆண்டுகால ரத்தமும் வேர்வையும், கனவும், உழைப்பும் வெறும் அரைமணி நேரத்தில் ஜாட் சாதிவெறிக் கும்பலால் சாம்பல் மேடாக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் சுயமரியாதை - தன்மானத்தின் குறியீடாக நிமிர்ந்து நின்ற அவர்களின் மாடி வீடுகளை ஜாட் சாதிவெறிக் கும்பல் குறிவைத்துத் தகர்த்தது. "மாடி வீட்டில் வாழும் அவர்கள் தங்களைத் தலித்துகள் என்று ஏன் இன்னும் கூறிக் கொள்கிறார்கள்?" என்று தாழ்த்தப்பட்டோரைச் சக மனிதர்கள் என்று ஏற்றுக் கொள்ளவே மனம் ஒப்பாமல் பொருமுகிறார்கள் கோஹனா நகர நடுத்தர வர்க்கத்தினர். இதில் ஜாட் சாதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற முன்னாள் பள்ளி ஆசிரியர் முதல் சிறுகடை வியாபாரிகள் வரை பலரும் அடக்கம். தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்பட்ட வன்முறை வெறியாட்டத்தையும் அவர்கள் குடியிருப்புகள் கொளுத்தப்பட்டதையும் "தவிர்க்க முடியாதது", "வேறு வழியில்லை" என்று வக்காலத்து வாங்கி வக்கிரமாக தங்கள் மகிழ்ச்சியை மறைமுகமாக வெளிப்படுத்துகிறார்கள். அந்த அளவு சாதி இந்துக்களிடம் தாழ்த்தப்பட்டோர் மீதான வெறுப்பு உயர்சாதி திமிராக அருவருப்பாக வழிகிறது.

தாழ்த்தப்பட்டோர் மீதான ஜாட் சாதிவெறியர்களின் வன்முறை வெறியாட்டத்திற்குத் துவக்கப் புள்ளியாக போலீசு சொல்லும் காரணம் வழக்கம் போல் சாதிவெறியர்களுக்கு குடை பிடிப்பதாகவே உள்ளது. பல்ஜூத் ஷிவாக் என்ற ஜாட் சாதிய இளைஞனை தலித்துகள் அடித்துக் கொன்றனர். அதுதான் இக்கலவரத்திற்கு விதை என்கிறது போலீசு.

உண்மையில் பல்ஜூத் ஷிவாக் என்பவன் ஊரறிந்த ரௌடி. பொம்பளை பொறுக்கி. இவனுடைய பொறுக்கித்தனத்தை தாழ்த்தப்பட்டோர் பலமுறை எச்சரித்துள்ளனர். திருமணமான இளம் தாழ்த்தப்பட்ட பெண்ணை இவன் வழிமறித்து வக்கிரமாக ஆபாச சைகை காட்ட, அதைப் பார்த்த தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் அவனைத் தாக்க, மோதலில் அவன் இறந்து போனான். மோதலில் ஈடுபட்ட 4 தாழ்த்தப்பட்ட இளைஞர்களை போலீசு உடனே கைது செய்து, வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்தது. இருந்தும், தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள் கொளுத்தப்பட்டதற்கு இதுதான் காரணம் என்று கரடி விடுகிறது, போலீசு.

ஆதிக்க சாதிவெறியர்களிடம் வழியும் அதிகார சாதிக் கொழுப்பை போலீசு எந்த அளவுக்கு நக்கி சுவைக்கிறது என்று தெரிகிறதா?

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

கோஹனாவில் ஜாட் சாதிவெறியர்களால் கொளுத்தப்பட்ட தாழ்த்தப்பட்டோரின் வீடு.



www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 20**

**இதழ் 12**

**அக்டோபர் 2005**

*உள்நாடு*
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

*வெளிநாடுகள்*
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை – 600 024.**


# அமெரிக்க சேவையில் இந்தியாவின் துரோகம்

மன்மோகன் சிங் இந்தியப் பிரதமராகப் பதவியேற்ற பிறகு முதன்முறையாக அமெரிக்காவுக்குப் போயிருந்தபோது அறிவித்தார்: ''இந்தியாவை விற்பதற்காக வந்திருக்கிறேன்!'' அப்போது யாரும் அந்தச் சொற்களை நேரடிப் பொருளில் எடுத்துக் கொள்ளவில்லை. பன்னாட்டுத் தொழிற்கழகங்களின் முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சியைத்தான் அப்படிச் சொல்கிறார் என்றே பலரும் நம்பினார்கள். ஈரானுடனான இந்தியாவின் இயற்கை எரிவாயு இறக்குமதி ஒப்பந்தத்தை அமெரிக்கா எதிர்த்தபோது, அதே மன்மோகன் சிங் தனது போலி கம்யூனிஸ்டு கூட்டாளிகளுக்கு வாக்குறுதி கொடுத்துச் சொன்னார், ''இந்தியா விற்பனைக்கு அல்ல'' என்று. அமெரிக்காவிற்கு விமானம் ஏறும் முன்பு இப்படிச் சவடாலடித்த மன்மோகன் சிங் அங்கே போய் இறங்கியவுடன், பொருட்களை மட்டுமல்ல; நாட்டையே பேரம்பேசி விலைக்கு விற்கக் கூடிய, உலகிலேயே மிகவும் சூழ்ச்சிகார மோசடித் தரகு பெரும் வியாபாரிதானேயென்று காட்டிவிட்டார்.

உலக மேலாதிக்க மேல்நிலை வல்லரசும், போர்வெறி பிடித்த ஏகாதிபத்திய நாடுமாகிய அமெரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தம்; அதனுடன் சிவிலியன் அணுசக்தி ஒப்பந்தம்; அந்தச் சமயத்திலே பேரம் பேசி முடித்து இரகசியமாக வைக்கப்பட்ட எழுதப்படாத இன்னொரு ஒப்பந்தம் ஆகியவற்றை கடந்த ஜூலை மாத அமெரிக்கப் பயணத்தின்போதே மன்மோகன் சிங் கும்பல் முடித்து விட்டது. துண்டைப் போட்டு மூடிக் கொண்டு, கைவிரல்களாலேயே பேரம் பேசி முடிக்கும் கால்நடைத் தரகு வியாபாரிகளைப் போல, அவமானகரமாகவும், அசிங்கமாகவும், கேவலமாகவும் செய்திருக்கிறார்கள். அடுத்து நடக்கவிருந்த, அனைத்து நாட்டு அணுசக்தி முகாமையின் இயக்குநர்கள் வாரியத்தின் வியன்னா சந்திப்பில், ஈரானுக்கு எதிரான ஐரோப்பிய நாடுகளின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்பதுதான் இரகசியமாக வைக்கப்பட்ட, எழுதப்படாத அந்த மூன்றாவது ஒப்பந்தம். இது ஏதோ இவ்வளவு காலமும் கூட்டுச் சேரா நாடுகளின் பக்கம் இருப்பதாகக் கூறிக் கொள்ளும் இந்தியாவின் அயலுறவுக் கொள்கையைக் கைவிட்டு அமெரிக்கச் சார்பு நிலையெடுத்து, தன்னைப்போலவே வளரும் நாடாகிய ஈரானுக்கு எதிராக வாக்களித்து விட்ட ஒரே தவறு என்று பார்க்கக்கூடாது.

இந்த ஒப்பந்தங்களின் சாரங்களையும், முக்கியத்துவத்தையும் புரிந்து கொண்டாலே மன்மோகன் சிங் - சோனியா கும்பல் எவ்வளவு பெரிய துரோகம் செய்துள்ளது என்பதை முழுமையாக அறிய முடியும். இன்றைய உலகின் பெட்ரோலிய எண்ணெய் இயற்கை எரிவாயு மிக்க நாடுகளில் ஒன்று ஈரான். ஆனாலும் அந்நாட்டின் இயற்கை எரிபொருள் பயன்பாடு தற்போதைய விகிதத்தில் தொடர்ந்தால் கூட, இன்னும் 20 ஆண்டுகளில் தானே பெட்ரோலிய எண்ணெய் இறக்குமதி நாடாகிவிடும். இயற்கை எரிசக்தியின் உலக அளவும் கூட வரம்புக்குட்பட்டதே; புதிதாக எண்ணெய் எரிவாயு ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் கூட இன்னும் சில பத்தாண்டுகளில் வேறு பிற எரிசக்திகளின் மூலாதாரங்களைத் தேடிக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு உலகின் பல நாடுகள் தள்ளப்பட்டு விடும். மூலாதாரம் அணுசக்திதான் அத்தகைய மலிவான மாற்று எரிசக்தி. அந்த வசதியை உருவாக்கிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்தினால் ஏற்கெனவே அந்த வசதி பெற்றுள்ள அமெரிக்கா, ரசியா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு, சீனா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் வரிசையில் சேருவதற்கு ஈரான், வடகொரியா போன்ற சில நாடுகளும் முயற்சிக்கின்றன.

தற்போதைய முதன்மை எரிசக்தியாகிய பெட்ரோலிய எண்ணெய் வளமிக்கதாக வேறு சில நாடுகள் உலகில் இருப்பினும், அமெரிக்காதான் அந்த வர்த்தகத்தில் ஏகபோக ஆதிக்கம் பெற்றுள்ளது; அதேபோல வருங்கால முதன்மை எரிசக்தியாகிய அணுசக்திப் பயன்பாட்டில் வேறு சில நாடுகளும் முன்னேறியிருந்தாலும், அமெரிக்காதான் அணுசக்தி, அணு ஆயுதத் தயாரிப்புகளில் முன்னணியாகவும் ஏகபோக நிலையிலும் உள்ளது. உலகின் வேறு எந்த நாடும் தன்னைப் பொருளாதார ரீதியிலும், இராணுவ ரீதியிலும் விஞ்சிவிடக் கூடாது, சுயசார்பு நிலையை அடைந்துவிடக் கூடாது என்ற மேலாதிக்க வெறியில் அமெரிக்கா துடிக்கிறது. அதற்காகவே எண்ணெய்வளமிக்க மத்திய-மேற்கு ஆசிய நாடுகளைத் தனது மேலாதிக்கத்தில் வைத்துக் கொள்வதற்காக ஆப்கானின் தாலிபான் - அல்கொய்தா பயங்கரவாதத்தையும் ஈராக்கின் சதாம் உசேனின் பாசிச ஆட்சியையும் காரணம் காட்டி, முறையே பயங்கரவாதம் மற்றும் மக்கள் பெருந்திரள் அழிவு ஆயுதக் குவிப்பு பீதியூட்டி அந்நாடுகள் மீது பேரழிவுப் போர்நடத்தி ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது.

தொடர்ச்சி 26-ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்க மாயையைக் கலைத்த கத்ரீனா

கடந்த ஆகஸ்டு 29 அன்று கடுமையான ஐந்தாம் ரக, தீவிரச் சூறாவளி புயல் கத்ரீனா தென்கிழக்கு லூசியானா - நியூ ஆர்லீன்ஸ், தெற்கு மிஸிஸிபி ஆகிய இரண்டு அமெரிக்க மாகாணப் பகுதிகளை மோதித் தாக்கியது. கடந்த ஏழாண்டுகளுக்குப் பிறகு இப்போது தான் இந்த அளவு இயற்கைச் சீற்றம் கடுமையாக இருந்திருக்கிறது.

புயலின்போது கடலின் அலைகள் இருபது அடி உயரம் எழும்பி ஆர்ப்பரித்தது; கரையோரம் பழமையில் எழுப்பப்பட்ட அரண்கள் தவிடு பொடியாக்கப்பட்டன; நியூ ஆர்லீன்சின் எண்ணெய்க் கிணறுகள் ஸ்தம்பித்தன; இரண்டு அணு உலைகள் முடங்கின. ஊருக்குள் பாய்ந்த கடலலை வீடுகளை மூழ்கடித்தது; நகரத்தை நாலா புறமும் சூறையாடியது.

சூறாவளிக்கு முன்னால் பொது எச்சரிக்கை வந்தவுடன் கார் வசதி இருந்த வெள்ளை அமெரிக்கர்கள் வெளியேறி விட்டார்கள். சூறாவளி தாக்கி உயிர்ப் பலி ஆனவர்கள் சுமார் 20,000 பேர்; ஏழ்மையினால் வெளியேறுவதற்குச் செலவு செய்ய முடியாமல் தங்கி சிக்கியவர்கள் 1,00,000 பேர் - பெரும்பான்மை ஆப்பிரிக்கா வம்சாவழி அமெரிக்கர்கள் - அதாவது, கருப்பர்கள். இவர்கள் மூன்று நாள் சோறு, தண்ணீர், சுகாதார வசதிகள் இல்லாமல் நோய்க் கிருமிகள் நடுவே, அழுகிய பிணங்களின் நடுவே மயக்கமாகவே கிடந்தார்கள்.

டெக்ஸாஸுக்குப் புகலிடம் தேடிப் போனவர்களை அம்மாகாணம் ஏற்க மறுத்தது. சொந்த நாட்டிலேயே அவர்கள் இன்று அகதிகள். எண்ணெய்ப் பணக்காரர்கள் நிறைந்த டெக்ஸாஸ் மாகாணத்தில் பொதுச் சேவை செய்ய ஏற்பாடுகளே கிடையாது என்று சொல்லி அம்மாகாண நிர்வாகம் கை கழுவி விட்டது - மைய அரசைக் கை காட்டி விட்டது. அங்கு எல்லாம் தனியார் உலகம்.

•••

புயல் எச்சரிக்கை வந்த நாள் ஆகஸ்டு 25. புஷ் பெயரால் அவசர நிலை அறிவிக்கப்பட்ட நாள் ஆகஸ்டு 27. அதன் பிறகும் கூட நியூ ஆர்லீன்சுக்கு கூடுதல் படையோ, தண்ணீர் - உணவு உதவிகளோ அனுப்பப்படவில்லை.

சூறாவளிப் புயல் கத்ரீனா தாக்கிய நாள் ஆகஸ்டு 29. செப்டம்பர் 1 அன்று உள்ளூர் அதிகாரிகள் ஐக்கிய (மைய) அரசிடம் உதவி கேட்டுக் கெஞ்சுகிறார்கள். நாகரீக நிலை கைவிட்டு ஆர்லீன்ஸில் மக்கள் உணவுக்காக அலைந்தார்கள். அதையே அமெரிக்கப் பத்திரிக்கைகள் - ''வெள்ளை அமெரிக்கர்கள் உணவு தேடிக் கண்டெடுத்து திரும்புகிறார்கள்'' என்றும், ''கறுப்பர்கள் கொள்ளை அடித்தார்கள்'' என்றும் எழுதி இனவெறி நஞ்சைக் கக்கின.

பிணங்கள் அழுக ஆரம்பித்தன. கொண்டு சென்று புதைக்கப் பாதுகாவல்படை இல்லை. 16,000 காவல் படைவீரர்கள் ஈராக்கில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். பிணங்கள் வைக்க இடமும் இல்லை.


நியூ ஆர்லீன்ஸ் போலீசு கண்காணிப்பாளர் உணவு - தண்ணீர் வந்து விட்டதாகப் புளுகினார்; மைய அரசின் அவசரநிலை அதிகாரி மைக்கேல் பிரவுன், தான் நியூ ஆர்லீன்ஸ் முகாமில் சோறு போட்டதாகப் புளுகினார் - இவர்தான் முந்திய நாள் முகாமில் மக்கள் இருப்பதே தெரியாது என்று தொலைக் காட்சிக்குப் பேட்டி கொடுத்தார். இந்த அதிகாரியின் வினோதமான திறமையைப் பார்த்து அனைத்து அமெரிக்க மக்களுமே கைகொட்டிச் சிரிக்கிறார்கள்.

ஆர்லீன்ஸ் மூழ்கிக் கொண்டிருந்தபோது ஆட்சித் தலைவர்கள் ஓய்வில் உல்லாசமாக இருந்தார்கள். (பார்க்க: பெட்டிச் செய்தி). அதேநேரம் உலகம் முழுவதும் ''டி.வி.'' சேனல்கள் சாவுச் செய்திகளைக் காட்டின. அமர்ந்த நிலையில், சுவரோடு மோதி நிற்கும் ஸ்டிரெச்சரில் சரிந்த நிலையில் பிணங்கள்; இனவெறியால் ஒதுக்கப்பட்ட ஆப்பிரிக்க - அமெரிக்கர்களின் கோபம் கொந்தளிக்கும் பேட்டிகள்.

•••

நியூ ஆர்லீன்ஸ் கடல்நீரில்

தற்காலிகத் தங்கும் இடங்களைக் கூட அமெரிக்க அரசு ஏற்பாடு செய்து தராததால், அநாதையைப் போல, நியூ ஆர்லின்ஸ் தெருவில் படுத்துறங்கும் கருப்பினக் குழந்தை.




படிப்பகம்




சூறாவளியில் இருந்து மக்களைக் காப்பாற்றாத அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அலட்சியத் திமிரை, ''வெட்கக் கேடு'' எனக் கண்டித்து அதிபர் மாளிகையின் முன் நடந்த ஆர்ப்பாட்டம்.

மூழ்கக் காரணம், கடந்த 5 ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாமல் இருந்த கடலோரப் பாதுகாப்புத் தடை அரண்கள் சூறாவளி தாக்கி உடைந்து விட்டன. இதனால் 3 இடங்களில் மொத்தம் 1000 அடிநீள உடைப்புகள் ஏற்பட்டு, அதன் வழியாகத்தான் கடல்நீர் புகுந்து நகரைச் சூறையாடி விட்டது.

இந்த நகரத்தையே 'சாத்தியமில்லாத' நகரம் என்பார்கள். அதாவது, கடல்மட்டத்திற்கு 10 அடி கீழே நிரந்தர அபாயத்தில் உள்ள நகரம். மிகப் பெரிய சுற்றளவு கொண்ட சதுப்புநிலங்களும், வெள்ளநீர் பரவிக் கிடக்க வெட்டவெளிகளும் 100 ஆண்டுகளுக்கு முன் இருந்தன. மெல்ல மெல்ல அந்த இடங்களைத் தூர்த்துக் கட்டிடங்களை எழுப்பினார்கள், பணக்காரர்கள். - நம் நாட்டில் மும்பை, கொல்கத்தா மற்றும் சென்னை கிழக்குக் கடற்கரையோரம் கடலை ஆக்கிரமித்ததைப் போலவே.

1927-இல் இராணுவப் பொறியாளரின் அரிய முயற்சியால் தடுப்பரண்கள் முதன்முதலில் எழுப்பப்பட்டன. எழுபதே ஆண்டுகளுக்குள் உலகமயத்தைக் காரணம் காட்டி மாகாணச் செலவை மைய அரசு வெட்டிவிட்டது; தடையரண் பாதுகாப்பை, பராமரிப்பை ரத்து செய்தது.

இத்தனைக்கும் கடந்த 10 ஆண்டுகளில் பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு வரிக் குறைப்பில் பல லட்சம் கோடிகளும், ஈராக் போர்ச் செலவு சுமார் எட்டரை லட்சம் கோடியும், தனியார் விவசாய வர்த்தக மானியமாக சுமார் 9 லட்சம் கோடியும் ஆக, மொத்தம் 20 லட்சம் கோடி ரூபாய் அரசு நிதி விரயம். அதையே காரணமாக்கி, நியூ ஆர்லீன்ஸ் நகரப் பாதுகாப்புக்காக ஆண்டுதோறும் தேவைப்பட்ட சில்லறைச் செலவு 50 கோடி ரூபாயைச் செலவு செய்ய மறுத்து நிறுத்திவிட்டது, அரசு.

தொடர்ந்து தடுப்பரணைப் பாதுகாத்து, செப்பனிட்டு, நவீனப்படுத்தி, வடிகால் பராமரிப்பும் பொறுப்போடு நடத்தியிருந்தால் நகரம் நீரில் மூழ்கியிருக்காது. ரீகன் காலத்திலிருந்தே அரசாங்கச் செலவையும், அரசாங்கத்தையும் வெட்டிக் குறைத்துக் கொண்டே வந்த மைய அரசு, கத்ரீனா சூறாவளி, பிறகு ரீட்டா புயலின்போது நியூ ஆர்லீன்ஸ் நகரையே தண்ணீரில் கவிழ்த்துவிட்டது.

அரசாங்கத்தை விமர்சித்தாலோ, எதிர்த்தாலோ 'வர்க்கப் போராட்டம், கலகம்' என்று பீதியூட்டி ஒடுக்கிவந்த அமெரிக்க அரசை இப்போது மக்கள் ''நிறவெறி, வர்க்க வேறுபாடு, ஏழை - பணக்காரன் பாகுபாடு காட்டும் பொறுப்பற்ற கையாலாகாத அரசு'' என்று நேரடியாக விமர்சிக்கிறார்கள்; ''ஆமாம், இது வர்க்கப் போர்தான்'' என்று துணிச்சலோடு எதிர்க்கவும் தொடங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் சொல்வது போலவே, இழவு விழுந்த பிறகுதான் புஷ் எட்டிப் பார்க்க வந்தார். எதற்காக? அமெரிக்காவின் 25 சதம் எண்ணெய் உற்பத்தி முடங்கி விட்டதை எப்படிச் சரி செய்வது என்று பரிசீலிப்பதற்காக; புஷ்ஷின் கட்டளையின் பேரில் துணை அதிபர் டிக்செனி ஓடிவந்தார் - கணக்கு காட்டுவதற்கும், எதிர்காலத்திற்கான ஒப்பந்த பேரங்கள் பார்ப்பதற்கும்.

இந்த நேரத்தில் கூட புஷ்ஷின் திமிர் குறையவில்லை. பேரழிவு ஏன் நடந்தது, எப்படி நடந்தது, பொறுப்பு யார் என்று கேள்விகளைச் சந்திக்கத் திராணியும், தார்மீக நியாயமும் இழந்துவிட்ட புஷ் வக்கிரமாகப் பேட்டி அளித்தார்: ''மக்கள் எங்களிடம் என்ன

## எங்கே அரசாங்கம்? எங்கே தலைவர்கள்?

கத்ரீனா, லூசியானா - ஆர்லீன்சைச் சூறையாடியபோது தலைவர்கள் எங்கே போனார்கள்?

- புஷ் ஓய்வில் இருந்தார் - அரபு நாட்டுக் குதிரைச் சவாரி, கோல்ஃப், படகுச் சவாரி. ஆர்லீன்ஸ் மூழ்கிவிட்டதே என்று நிருபர்கள் கேட்டபோது, ''இப்படி ஆகுமென்று யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது'' என்று திமிராகச் சொன்னார் புஷ். ஆனால், பொறுப்பை எப்படிக் கை கழுவலாம் என்று அவர் உள்ளுக்குள்ளே யோசித்துக் கொண்டிருக்க வேண்டும் - பேயறைந்த முகம் போல அவர் முகம் இருந்தது.

- டிக் செனி - துணை அதிபர் எங்கே? வையோமிங் என்ற இடத்தில் சாராயத்தில் கிடந்தது அந்த விசித்திர மிருகம். சுமார் 15 கோடி மதிப்புள்ள, நீர் முத்தாய்ச் சொரியும் அருவி கொண்ட பண்ணையை வாங்கும் பேர விருந்தில் 'பிசி'யாக இருந்தாராம். ஜனாதிபதி புஷ் செல்லமாக அழைத்து ஆர்லீன்சுக்கு ஓடச் சொன்னாராம். ஏன் தெரியுமா? ஆர்லீன்ஸ் நகரை மறுநிர்மாணம் செய்யும் ஒப்பந்தத்தை முன்பு, தான் நிர்வாகம் செய்த ஹாலிபர்டன் கம்பெனிக்கே கிடைக்குமாறு உறுதி செய்யவே அந்தக் கடைசி நிமிட நாடகம்.

- வெளியுறவுச் செயலர் காண்டலீசா ரைஸ் - அவர் எங்கே? மன்ஹாட்டன் நகரிலே ஊரே கூடி வேடிக்கை பார்க்க, ஒரு ஜோடி ஷூ (Shoe) மூன்றரை லட்சம் எனப் பேரம் பேசி வாங்க ஷாப்பிங் செய்து கொண்டிருந்தார். பிலிப்பைன்சின் திருமதி மார்க்கோஸ், தமிழகத்தின் செல்வி.ஜெயலலிதா வரிசையில் இப்போது ஒரு காண்டலீசா ரைஸ்.

www.padippakam.com

கேட்கிறார்கள்? யார் மீதாவது பழிபோடும் விளையாட்டு ஆடச் சொல்கிறார்கள்.'' யார் மீதாவது பழிபோடும் அநியாயமான குணம் அமெரிக்க உழைக்கும் மக்களிடம் இல்லை; அவர்கள், நேருக்கு - நேராக புஷ் மற்றும் புஷ் கும்பல் மீதுதான் குற்றம் சாட்டுகிறார்கள்.

புஷ்ஷின் வக்கிரப் பொய்களை மக்கள் அறுத்து வெளியே கொண்டு வந்து விட்டார்கள். முதல் பொய்: ''இப்படி ஒரு அபாயம் நியூ ஆர்லீன்சுக்கு வருமென்று யாருக்குமே தெரியாது.'' இரண்டாவது பொய்: ''மக்கள் பழிபோடும் விளையாட்டு ஆட விரும்புகிறார்கள்.''

புஷ்ஷிற்கு ஒருபடி மேலே போய் அவர் அம்மா பார்பரா, ''டெக்ஸாஸுக்கு வந்த அகதிகள் அங்குள்ள உபசரிப்பைக் கண்டு அங்கேயே தங்கிவிட ஆசைப்படுகிறார்கள்'' என்று வக்கிரம் ஒழுகப் பேசியிருக்கிறார். இவ்வளவு பேசிய பிறகுதான் காரியக் கோமாளி புஷ் கடைசி 'அஸ்திரமாக' வெள்ளை மாளிகை விசாரணைக் கமிசனை அவிழ்த்து விட்டிருக்கிறார். அமெரிக்கா மட்டுமல்ல, உலகத்துக்கே விசாரணைக் கமிசன்களின் ரகசியம் ஊர் அறிந்த இரகசியமாதலால் யாரும் புஷ்ஷை நம்புவதாக இல்லை.

•••

''இந்தியா போன்ற ஏழை நாடுகளில் இருக்கும் அதிகார வர்க்கமும், அரசியல்வாதிகளும்தான் பொறுப்பில்லாமல் நடந்து கொள்வார்கள். ஆனால் அமெரிக்க சமூகமோ சொக்கத் தங்கம்'' என்ற ஒரு பிம்பத்தை, இங்கே படித்த நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் முதலாளித்துவ பத்திரிகைகளும்; துக்ளக் ''சோ'', சுப்பிரமணிய சுவாமி போன்ற அமெரிக்க எடுபிடிகளும் உருவாக்கி வைத்துள்ளனர். இந்த மாய்மாலத்தை கத்ரீனா சூறாவளி அடித்து நொறுக்கி விட்டது.

அமெரிக்கா அருகே இருக்கும் சின்னஞ்சிறு ஏழை நாடான கியூபா கூட, சூறாவளி தாக்குவதற்கு முன்பே, தனது குடிமக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தியிருக்கிறது. ஆனால், ''நட்சத்திர போர்'' நடத்தும் அளவிற்கு அறிவியல் 'வளர்ச்சி'யில் முன்னேறியிருக்கும் அமெரிக்காவால் நியூ ஆர்லின்ஸ் நகரைச் சேர்ந்த ஏழை கருப்பின மக்களை, ஏன் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல முடியவில்லை?

ஆசிய நாடுகளை ''சுனாமி'' தாக்கியபொழுது, தனது கப்பற்படையை உடனடியாக இலங்கைக்கும், தாய்லாந்திற்கும் அனுப்பி தன்னை ''ஆபத்தாண்டவனாக''க் காட்டிக் கொண்ட அமெரிக்கா, தனது குடிமக்களை - அமெரிக்க கருப்பர்களை ஏன் கைவிட்டது?

''எங்கும் தனியார்மயம், எதிலும் தனியார்மயம்'' எனக் கூப்பாடு போடும் அமெரிக்க அரசியல் தலைவர்கள், ஒரு இயற்கைப் பேரழிவு ஏற்படும் பொழுது மட்டும் சமூக பொறுப்புடன் நடந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது. அதனால்தான், அவரவர் பாதுகாப்பை அவரவர் தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என ஒதுங்கிக் கொண்டு, நியூ ஆர்லின்ஸ் நகர மக்களைக் கைவிட்டு விட்டார்கள்.

ஏழை நாடுகளின் அரசுகள், தங்களின் குடிமக்களுக்கு ரேஷனில் அரிசி கொடுக்கக் கூடாது; விவசாய மானியம் கொடுக்கக் கூடாது; இலவச கல்வி, மருத்துவ வசதி செய்து தரக் கூடாது; மொத்தத்தில் சமூக பொறுப்புடன் நடந்து கொள்ளக் கூடாது என உத்தரவு போடும் ஒரு ஏகாதிபத்திய அரசு (அமெரிக்கா) உள்நாட்டில் சமூக பொறுப்புடன் நடந்து கொள்ளாது.

ஏழை நாடுகள் இயற்கைப் பேரழிவினால் சீரழிந்து நிற்கும்போது கூட, ''உதவி'' என்ற போர்வையில் அந்நாடுகளில் தனது சுரண்டலை, ஆதிக்கத்தை விரிவாக்கிக் கொள்ளும் ஒரு கந்து வட்டி அரசு (அமெரிக்கா), உள்நாட்டு மக்கள் இயற்கைப் பேரழிவில் சிக்கிக் கொள்ளும்போது மனிதாபிமானத்தோடு நடந்து கொள்ளாது.

''ஜனநாயக'' முகமூடிக்குள் மறைந்து இருக்கும் அமெரிக்காவின் இந்தக் கோர முகத்தைத்தான் கத்ரீனா, அமெரிக்க மக்களுக்கும், உலகுக்கும் மீண்டும் எடுத்துக் காட்டியிருக்கிறது.

• வேலாயுதம்

# அதிகாரிகளை மண்டியிட வைத்த மக்கள் போராட்டம்!

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை நகரில் 'டெலிபோன் கேபிள்' புதைப்பதற்கு அரசின் தொலைத்தொடர்பு நிறுவனமான பி.எஸ்.என்.எல். அந்நகரின் மேல்கரை பிரதான சாலையை பொக்லைன் இயந்திரம் கொண்டு இரண்டாகப் பிளந்தது. மீண்டும் தார்ச்சாலை அமைக்காமல், அதில் அவசரமாக மண்ணை மூடிவிட்டு ஓடிவிட்டது.

நகரின் பிரதான சாலை புழுதி மேடாகிப் போனதால், நகரப் பேருந்துகள் ஊருக்குள் வரமுடியாமல் புறவழிச்சாலை வழியே இயங்க ஆரம்பித்தன. போக்குவரத்து தொடர்பு அறுந்து, நகரமே தனித்து, தீவாகிப் போனது. மாணவர்களும் பொதுமக்களும், வர்த்தகர்களும் சொல்ல முடியாத துன்பத்தை அனுபவித்தனர். அப்பகுதியில் இயங்கும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி மற்றும் நகர வர்த்தகர்கள் சங்கமும் சேர்ந்து சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளிடம் தார்சாலை அமைத்துத் தரும்படி கோரிக்கை மற்றும் சுவரொட்டி இயக்கம் நடத்தினர். அதிகாரவர்க்கம் கண்டு கொள்ளவே யில்லை. அதிகார வர்க்கத்தின் ஆணவப் போக்கைக் கண்டித்து, சாலை மறியல் போராட்டம் திட்டமிடப்பட்டது.

மானாமதுரை நகரத்தின் வர்த்தகர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள் மற்றும் பு.மா.இ.மு.வும் இணைந்து கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் 26.9.05 அன்று மதுரை - இராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். அதேநாளில், அப்பகுதியில் இராமநாதபுரம் சரக டி.ஐ.ஜி.யின் வருகை - பாதுகாப்புக்காக அங்கு குவிக்கப்பட்டிருந்த போலீசு பட்டாளம் போராட்டக்காரர்களை நோக்கிப் பாய்ந்து வந்தது.

ஆனால், போராட்டத்தை முன்னின்று வழிநடத்திய புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியினர் உறுதியுடன் போராட்டத்தைத் தொடர்ந்ததும், உடனே நெடுஞ்சாலைத் துறையின் உதவி செயற்பொறியாளரைத் தொடர்பு கொண்டு போராட்டப் பகுதிக்கு வரவழைத்தது போலீசு. ரஜினி என்ற நெடுஞ்சாலைத்துறை செயற்பொறியாளர் ''15 நாட்களில் மீண்டும் தார்ச்சாலையாக அமைத்துத் தருகிறோம்'' என்று வாய்வழி உறுதிமொழியை கொடுத்து விட்டு ஓட நினைத்தார். ஆனால், போராட்டக்காரர்களின் உறுதியைக் கண்டு ஒரு வாரத்திற்குள் அமைத்துத் தருகிறோம் என்று எழுத்துப் பூர்வமாக எழுதிக் கொடுத்தார்.

சமரசமற்ற, உறுதியான, ஒன்றுபட்ட போராட்டம்தான் வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதைத் தங்களின் அனுபவம் மூலமே கற்றுணர்ந்தனர், மானாமதுரை நகர மக்கள்.

*தகவல்: பு.ஜ. செய்தியாளர், மானாமதுரை.*


படிப்பகம்

www.padippakam.com

# பு.மா.இ.மு. தோழர்கள் மீது கொலைவெறி தாக்குதல்! அ.தி.மு.க. ரவுடிகள் – போலீசு கூட்டுச்சதி!

பொதுச் சொத்தைக் கொள்ளையடிப்பதைத் தங்களது பிறப்புரிமையாக கருதிக் கொண்டு கொட்டமடிக்கும் அ.தி.மு.க. பொறுக்கி கும்பல், கழிப்பறையைக்கூட விட்டு வைப்பதில்லை. சிவகிரி ஊராட்சியில் பெண்களுக்கென புதிதாக ஒரு கழிப்பறை கட்டப்பட்டது. இது அ.தி.மு.க. சார்பான மகளிர் சுய உதவிக் குழுவுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. குத்தகை எடுத்த அக்குழு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத் தொகையைவிட கூடுதலாக வசூலித்தது. இதனை எதிர்த்துக் கேட்ட பெண்களைக் கேவலமாகத் திட்டுவது, கழிப்பறையை இழுத்துப் பூட்டி விடுவது என அராஜக ஆட்டம் போட்டது.

பகுதிவாழ் உழைக்கும் பெண்கள் இது பற்றி இப்பகுதியில் இயங்கிவரும் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியிடம் முறையிட்டனர். பு.மா.இ.மு. தோழர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே 24.8.05 அன்று பொதுமக்களைத் திரட்டி சாலை மறியல் போராட்டத்துக்கு பு.மா.இ.மு. தோழர்கள் அறைகூவல் விடுத்தனர். உடனே, கழிப்பறையைக் குத்தகைக்கு விட்டதை ரத்து செய்தது, ஊராட்சி நிர்வாகம். ஆரம்ப முதலே 'மக்கள் நலக் கமிட்டி' என்ற பெயரில் கட்டப் பஞ்சாயத்து செய்துவரும் ஜோதிராமலிங்கம், கொங்கு வேளாளக் கவுண்டர் பேரவையின் செயலாளர் சூரியமூர்த்தி ஆகியோர் தலைமையிலான கும்பல் மகளிர் சுய உதவிக் குழுவின் கழிப்பறைக் கொள்ளைக்குப் பக்கபலமாக இருந்து ஆதாயமடைந்து வந்தது. பு.மா.இ.மு. இப்பிரச்சினையில் தலையிடுவதைக் கண்டு ஆத்திரமடைந்த இக்கும்பல், தோழர்களை மிரட்டி வந்தது.

இப்பிரச்சினைக்கு முன்பாக, சிவகிரிக்கு வரும் தனியார் பேருந்துகளை இலாபம் அதிகம் வரும் வழித்தடங்களுக்கு மாற்றிக் கொண்டு சில தனியார் பேருந்து முதலாளிகள் ஆதாயமடைந்து வந்தனர். இவர்களுக்கு ஆதரவாக அ.தி.மு.க. அமைச்சர் பி.சி.இராமசாமி, அதிகார வர்க்கத்தை ஏவிவிட்டு தனது சாதிய - வர்க்க விசுவாசத்தைக் காட்டி வந்தார். சிவகிரியில் பழையபடி பேருந்துகளை இயக்க வேண்டும் என்ற மக்கள் கோரிக்கையை வலியுறுத்திப் போராட அனைத்து கட்சிகள் - அமைப்புகளைக் கொண்ட கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டது. அமைச்சர் இராமசாமியின் கைத்தடிகளாக - ஏவல் நாய்களாகச் செயல்பட்டுவரும் சூரியமூர்த்தியும் ஜோதி ராமலிங்கமும் பிற கட்சிகள் - அமைப்புகளை மிரட்டி இக்கமிட்டியையே கலைத்ததோடு, அமைச்சரின் செயலை ஆதரித்து சுவரொட்டிகளை நகரில் ஒட்டினர்.

மேற்கூறிய இரு சம்பவங்கள் மட்டுமின்றி, இவ்விருவரும் கந்துவட்டி, கட்டப்பஞ்சாயத்து, ரவுடித்தனங்களில் ஈடுபட்டு வருவது ஊரறிந்த ரகசியம். கவுண்டர் சாதி இளைஞர்களை ''மச்சான்'', ''மாப்பிள்ளை'' என்று உறவு சொல்லி இழுத்து, சாதிவெறியூட்டி தமது அடியாட்களாகப் பயன்படுத்தி வரும் இவர்களின் கேடுகெட்ட கிரிமினல் நடவடிக்கைகளையும், அமைச்சர் பி.சி.இராமசாமியின் மக்கள் விரோதச் செயல்களையும் 26.8.05 அன்று நடந்த தெருமுனைக் கூட்டத்தில் பு.மா.இ.மு. தோழர்கள் அம்பலப்படுத்திப் பேசினர்.

இதைக் கண்டு ஆத்திரமடைந்த இக்கும்பல், பு.மா.இ.மு. தோழர்களை அடிக்கடி மிரட்டி வந்தது. 5.9.05 அன்று இரவு 10 மணியளவில், தோழர்கள் புஷ்பராஜ், சசி, பழனிச்சாமி, கோவிந்தசாமி ஆகிய நால்வரையும் 15-க்கும் மேற்பட்ட இக்கும்பல் வீண் வம்புக்கிழுத்து மிருகத்தனமாகத் தாக்கியது. அவர்களை விரட்டியடித்து விட்டு, வீண் தகராறு செய்து தாக்கிய ரவுடிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தோழர்கள் போலீசிடம் புகார் மனு கொடுத்தனர். அதைப் பெற்றுக் கொண்ட சிவகிரி காவல் நிலைய ஆய்வாளர் மனோகரன், மருத்துவமனைக்குப் போகச் சொல்லி ''மெமோ'' கொடுத்துள்ளார்.

சிவகிரியிலிருந்து ஈரோடு மருத்துவமனைக்கு இரவுப் பேருந்து இல்லாததால் செந்தில்குமார் என்ற தோழரையும் உடனழைத்துக் கொண்டு தோழர்கள் வாடகைக் கார் பிடித்து ஈரோட்டுக்குப் புறப்பட்டனர். விளக்கேந்தி என்ற இடத்திற்கருகே கார் வந்து கொண்டிருந்தபோது, இரவு சுமார் 12.30 மணி இருக்கும். அப்போது இரண்டு கார்கள், ஆறு - ஏழு

தோழர் செந்தில் குமார்



தொடர்ச்சி 23-ஆம் பக்கம்

www.padippakam.com

## ஏகாதிபத்திய சேவையில் போட்டா போட்டி:

# சிவப்புத் தரகர்களாக சி.பி.எம்.

"நாங்கள் எங்கள் கொள்கையைத் தலைகீழாக 180 டிகிரிக்கு மாற்றிக் கொண்டு விட்டோம்" என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்த மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா, இப்போது இன்னும் ஒருபடி முன்னேறி உலகமயத்துக்கு வெளிப்படையாகவே பக்க மேளம் வாசிக்கக் கிளம்பிவிட்டார்.

தமிழகத்தைத் தொழில்மயமாக்க ஹூண்டாய் கார் தொழிற்சாலையைக் கொண்டு வந்தேன்; நோக்கியா செல்போன் ஆலையைக் கொண்டு வந்தேன் என்றெல்லாம் கருணாநிதியும் ஜெயலலிதாவும் போட்டா போட்டி போடுவதைப் போல, மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வரும் அம்மாநிலத்தைத் தொழில்மயமாக்குவது என்ற பெயரில் அன்னிய முதலீடுகளுக்கு போட்டிபோட்டுக் கொண்டு சிவப்புக் கம்பளம் விரித்து வருகிறார். ஏற்கெனவே மிட்சுபிஷி, ஐ.பி.எம்., பெப்சி முதலான அன்னிய நிறுவனங்கள் மே.வங்கத்தில் முதலீடு செய்திருப்பது போதாதென்று இப்போது சிங்கப்பூர், இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தேசங்கடந்த தொழிற்கழகங்களை மே.வங்கத்தில் முதலீடு செய்ய அவர் அழைப்பு விடுத்துள்ளார்.


அண்மையில் தென்கிழக்காசிய நாடுகளுக்குச் சென்ற அவர், இந்தோனேஷியாவின் மிகப் பெரிய தரகு முதலாளித்துவ நிறுவனமான சலீம் குழுமத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார். இதன்படி, மேற்கு வங்கத்தின் 24 பர்கானா மாவட்டத்தின் தென்பகுதியில் ஒரு புதிய தொழில் நகரத்தை 5100 ஏக்கர் பரப்பளவில் சலீம் கம்பெனி அமைக்கும். அங்கு இரு சக்கர மோட்டார் வாகன உற்பத்தி, உதிரிப்பாக உற்பத்தியைத் தொடங்கும். இது தவிர ஒரு மருத்துவ நகரத்தையும் சர்வதேசத் தரத்துடன் உருவாக்கும். இதற்காக 80 கி.மீ. நீள அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்படும். இதற்கான அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகள் விரைவில் நடத்தப்படும்.

சலீம் குழுமம் மட்டுமின்றி, சிபுத்ரா நிறுவனமும் மே.வங்கத்தில் முதலீடு செய்ய முன்வந்துள்ளது. இந்தோனேஷியாவின் பாக்ரீ நிறுவனம் நிலக்கரி சுரங்கத் திட்டத்தில் முதலீடு செய்யத் தீர்மானித்துள்ளது. சிங்கப்பூரின் ஏப்ரல் ஃபைன் நிறுவனம் காகித ஆலையைத் தொடங்க முன்வந்துள்ளது.

இந்தச் 'சாதனை'களைக் கண்டு பூரிப்படைந்த புத்ததேவ், "உலகமயமாக்கத்தை ஏற்று செயல்படுத்தியே தீர வேண்டும். அதை யாரும் தடுத்து நிறுத்திட முடியாது. பொருளாதார சீர்திருத்தத்தை மேற்கொள்வதா அல்லது அழிவுக்கு ஆளாவதா என்ற இரு வாய்ப்புகளே மே.வங்கத்தின் முன்னே உள்ளன. நாங்கள் அழிவுப் பாதையில் செல்ல ஒருபோதும் தயாராக இல்லை. நாம் உலகமயப் போக்கைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. நாம் அதனுடன் அரவணைத்துச் செல்ல வேண்டும். அதே சமயம் நமது நலன்களை நாம் விட்டுக் கொடுக்கவும் கூடாது. சீனாவைப் பாருங்கள். சீனாவின் விரைவான பொருளாதார மாற்றங்களிலிருந்து நாங்களும் படிப்பினைகளைக் கற்றுக் கொண்டுள்ளோம்" என்று பேட்டியளித்துள்ளார்.

சி.பி.எம். கட்சி உலகமயமாக்கலை எதிர்க்கிறதே! நீங்கள் அதன் கொள்கைக்கு மாறாகப் பேசுகிறீர்களே! என்று கேட்டால், "நான் கட்சியின் கொள்கையைத்தான் பேசுகிறேன். மாற்றம் நிரந்தரமானது. மாறிய காலத்துக்கேற்ப நாமும் மாறவேண்டும். பழைய கொள்கை-கோட்பாடுகளையே பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது" என்று ஒரே போடாகப் போடுகிறார் இப்போலி கம்யூனிஸ்டு முதல்வர். கடுங்கோட்பாட்டுவாதியாகச் சித்தரிக்கப்படும் சி.பி.எம். கட்சியின் பொதுச் செயலாளரான பிரகாஷ்கரத், புத்ததேவின் கருத்தை வெறும் உளறல் என்று சாடவில்லை. மாறாக, புத்ததேவ் கூற்றில் தவறேதுமில்லை என்கிறார். இதில் கொள்கை முரண்பாடு ஏதுமில்லை என்று புத்ததேவுக்கு துணைநிற்கிறார் சி.பி.எம். கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜோதிபாசு.

இது ஒருபுறமிருக்கட்டும். மே.வங்கத்தில் முதலீடு செய்ய முன்வந்துள்ள சலீம் கம்பெனியானது, இந்தோனேஷியாவைச் சூறையாடிய பாசிச சர்வாதிகாரியான சுகார்டோவின் நெருங்கிய கூட்டாளி நிறுவனமாகும். கம்யூனிஸ்டுகளை நரவேட்டையாடிய கொலைகார சுகார்டோ, அமெரிக்காவின் விசுவாசமான கைக்கூலி என்று உலகெங்கும் பிரபலமானவர். கம்யூனிஸ்டுகளை ஒழிக்க சுகார்டோவுக்கு துணையாக நின்ற சலீம் கம்பெனியை மே.வங்கத்தில் அனுமதிப்பது எப்படி நியாயமாகும்? என்று கேட்டால், "எனக்கு முதலீடுகள் தேவை. பணத்



www.padippakam.com

துக்கு நிறமில்லை; தேசிய அடையாளமுமில்லை. அந்தப் பணம் கருப்புப் பணமாக, கடத்தல்காரர்களின் பணமாக இல்லாதவரை எங்களுக்குப் பிரச்சினை ஏதுமில்லை. நாங்கள் கடந்த காலத்தைத் தோண்டித் துருவ விரும்பவில்லை'' என்று கொலைகார கம்பெனிக்கு வக்காலத்து வாங்குகிறார் புத்ததேவ்.

சில்லறை வியாபாரத்தில் அன்னிய முதலீடுகளை எதிர்ப்பதாக சி.பி.எம். கட்சி கூறிக் கொள்கிறது. ஆனால் இந்தோனேஷிய நிறுவனம் கொல்கத்தாவில் மிகப் பெரிய ''ஷாப்பிங் மால்'' திறக்க புத்ததேவ் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளார். மேலும், புதிய துறைமுகங்கள் - விமான நிலையங்களை மே.வங்கத்தில் நிறுவ 100% அன்னிய முதலீடுகளை வரவேற்பதாகவும் கூறியுள்ளார். கொல்கத்தா நகரை தென்கிழக்காசியாவின் வர்த்தக நுழைவாயிலாக மாற்றுவேன் என்றும் சூளுரைத்துள்ளார். இப்படி வெளிப்படையாகவே 100% அன்னிய முதலீடுகளை வெறிபிடித்து வரவேற்பதைப் பற்றி பத்திரிகையாளர்கள் கேட்டபோது, முற்றாக அம்பலப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள, ''இத்துறைகளில் 49% அன்னிய முதலீட்டை மட்டுமே இந்திய அரசு அனுமதிப்பதாகக் கொள்கை வகுத்திருக்கும்போது, நான் எப்படி 100% அன்னிய முதலீட்டைப் பற்றிப் பேசியிருக்க முடியும்?'' என்று தென்னை மரத்தில் ஏறி புல்புடுங்கப் போனவன் கதையாகப் பூசி மெழுகுகிறார். இதன் மூலம், ''இந்திய அரசு இத்துறைகளில் 100% அன்னிய முதலீட்டை அனுமதிப்பதாகக் கொள்கை வகுத்தால், நாங்களும் மே.வங்கத்தை தொழில்மயமாக்குவது என்ற பெயரில் 100% அன்னிய முதலீட்டை இத்துறைகளில் வரவேற்போம்'' என்று சொல்லாமல் சொல்கிறார்.



''உலகமயமாக்கத்தை ஏற்று செயல்படுத்தியே தீர வேண்டும். அதை யாரும் தடுத்து நிறுத்திட முடியாது. பொருளாதார சீர்திருத்தத்தை மேற்கொள்வதா அல்லது அழிவுக்கு ஆளாவதா என்ற இரு வாய்ப்புகளே மே.வங்கத்தின் முன்னே உள்ளன. நாங்கள் அழிவுப் பாதையில் செல்ல ஒருபோதும் தயாராக இல்லை. நாம் உலகமய போக்கைத் தடுத்து நிறுத்தி விட முடியாது. நாம் அதனுடன் அரவணைத்துச் செல்ல வேண்டும்.''

மேலும், இதர மாநிலங்களைப் போலவே, மே.வங்கத்தில் சலீம் குழுமம் நிறுவ உள்ள ஆலைக்கு, நிலம், நீர், மின்சாரம், போக்குவரத்து முதலான சலுகைகளோடு வரிச் சலுகைகளும் அளிக்கப்படவுள்ளன. 24 பர்கானா மாவட்டத்தில் இந்த ஆலை அமையவுள்ள பகுதியிலிருந்து 45,000 விவசாயக் குடும்பங்கள் வெளியேற்றப்பட உள்ளன என்று செய்திகள் கசிந்துள்ளன. இதைத் தொடர்ந்து 'இடதுசாரி' கூட்டணியிலுள்ள வலது கம்யூனிஸ்ட் கட்சி, புரட்சி சோசலிஸ்ட் கட்சி, பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளதோடு, அவ்வாறு விவசாயிகளின் நிலங்கள் பறிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டால், நாங்கள் மாநிலம் தழுவிய போராட்டங்களை நடத்துவோம் என்று எச்சரித்துள்ளன. சி.பி.எம். கட்சியிலுள்ள அதிருப்தியாளர்கள் திரிணாமுல் காங்கிரசு கட்சியுடன் சேர்ந்து இப்போதே போராடப் போவதாகக் கூறி வருகின்றனர்.

இவற்றைக் கண்டு பீதியடைந்த புத்ததேவ், ''இவை விவசாய நிலங்கள் அல்ல; தரிசு நிலங்கள். எனினும், பாதிக்கப்படும் விவசாயக் குடும்பங்களுக்கு உரிய நிவாரணமும் வேலை வாய்ப்பும் அளிப்போம்'' என்று இதர மாநிலங்களின் முதல்வர்களைப் போலவே வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார்.

அன்னிய முதலீடுகளை ஆதரித்து அதற்கு விசுவாசமாகச் சேவை செய்து வரும் புத்ததேவின் நடவடிக்கைகளைக் கண்டு பூரிப்படைந்துள்ள பிரதமர் மன்மோகன் சிங், ''புத்ததேவிடமிருந்து இடதுசாரிகள் கற்றுக் கொள்ள வேண்டும்'' என்று உபதேசிக்கிறார்.

ஆனால், ''அவர் இடதுசாரியா? அல்லது இடதுசாரி கட்சிக்குள் இருக்கும் வலதுசாரியா?'' என்று முதலாளித்துவப் பத்திரிகைகளே கேள்வி எழுப்புகின்றன.

குரங்கு தன் குட்டியின் கையைப் பிடித்து சூடான உணவுப் பொருட்களின் மீது வைத்து பதம் பார்த்து, அதைக் கொண்டு அந்த உணவு சூடாக இருக்கிறதா, ஆறிவிட்டதா, சாப்பிடலாமா என்று சோதித்துப் பார்க்குமாம். அப்படித்தான் சி.பி.எம். கட்சியும் புத்ததேவை வைத்து அன்னிய முதலீடுகளை ஆதரித்து மறுகாலனியாக்கத்துக்கு விசுவாசமாகச் சேவை செய்வதைப் பற்றி மெதுவாக சோதித்துப் பார்க்கிறது. நிலைமை சூடாக இருந்தால், ஆறப்போடலாம்; பதமாக இருந்தால் செயல்படுத்தலாம் என்று கணக்கு போட்டு காய் நகர்த்திக் கொண்டிருக்கிறது சி.பி.எம். கட்சியின் துரோகத் தலைமை. கடவுள் நம்பிக்கை மட்டுமல்ல; தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் கொள்கைகளோடு வரும் மறுகாலனியாதிக்கத்தை சி.பி.எம். கட்சி எதிர்த்துப் போராடும் என்று இன்னமும் யாராவது நம்பிக் கொண்டிருந்தால், அதுவும் மூடநம்பிக்கைதான்!

• குமார்

அன்பார்ந்த
வாசகத் தோழர்களே,

இந்த இதழோடு உங்களது ''புதிய ஜனநாயகம்'' இதழ் 20-வது ஆண்டை நிறைவு செய்கிறது. இருபதாண்டுகளாக இவ்விதழ் தொடர்ந்து வெளிவரப் பல்வேறு வழிகளிலும் உதவிய உங்கள் அனைவருக்கும் எமது புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும், இந்துவெறி பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற, உங்களது ஊக்கமான ஆதரவை அடித்தளமாகக் கொண்டு 21-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர உறுதியேற்கிறோம்.

— ஆசிரியர் குழு

www.padippakam.com

## அடிப்படைக் கட்டமைப்புத் துறையின் 'வளர்ச்சி':

# ஒட்டுண்ணித்தனத்தின் புதிய பரிமாணம்

“இது நாலு வழிச்சாலை மட்டுமல்ல. பொருளாதார முன்னேற்றத்துக்கான நல்வழிச் சாலை'' என்று கடந்த செப்டம்பர் 18-ஆம் தேதியன்று நாங்குநேரி - கிருஷ்ணன் புதூரில் நடந்த நான்கு வழிச் சாலைக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார், தி.மு.க. தலைவர் கருணாநிதி. காசியையும் கன்னியாகுமரியையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையில் (எண்:7) கோவில்பட்டியிலிருந்து நெல்லை வழியாக பணகுடி வரையிலான 123 கி.மீ. நீள இருவழிச் சாலையானது ரூ. 630 கோடியே 42 லட்சம் செலவில் நான்கு வழிச்சாலையாக மாற்றியமைக்கப்படுகிறது. இதற்கான விழாவில் கலந்து கொண்டு அடிக்கல்லைத் திறந்து வைத்த கருணாநிதி, இது நல்வழிச்சாலைக்கான கால்கோள் விழா என்றும் குறிப்பிட்டார்.

இந்த நான்கு வழிச்சாலை விரிவாக்கத்தால் வேலை வாய்ப்பு பெருகும்; பயண நேரம் குறையும்; வணிகர்களும் விவசாயிகளும் பயனடைவர்; ஏற்றுமதிப் பொருட்கள் பெரிய துறைமுகங்களை விரைவில் சென்றடையும்; சுற்றுலாத்துறை வளரும் என்று தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது. ''இத்தகைய அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்கள்தான் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம்'' என்கிறார் நிதியமைச்சர் ப.சிதம்பரம். ''ஆனால், இந்தியாவில் அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களில் முதலீட்டுப் பற்றாக்குறை பூதாகரமாக உள்ளது'' என்று வேதனைப்படும் அவர், ''இத்தகைய திட்டங்களில் வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வரவேண்டும்'' என்று அழைப்பு விடுத்துள்ளார். இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களில் 1500 கோடி டாலர் (ஏறத்தாழ ரூ. 67 லட்சம் கோடி) அளவுக்கு முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன என்று அறிவித்துள்ள அவர், பாரத ஸ்டேட் வங்கியும், மெரில் லிஞ்ச் என்ற நிதி நிறுவனமும் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் கடந்த செப்டம்பரில் நடத்திய அன்னிய முதலீட்டாளர் கூட்டத்திலும் பங்கேற்று, இந்தியாவில் முதலீடு செய்ய வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சிக்கு நீர்ப்பாசனம், அணைக்கட்டுகள், போக்குவரத்து, மின்சாரம், தொலைத்தொடர்பு முதலான அடிப்படைக் கட்டமைப்புத் துறையில் முதலீடுகள் அவசியமானதுதான். இருப்பினும் என்ன வகையான அடிப்படைக் கட்டமைப்புத் துறை நாட்டுக்கும் மக்களுக்கும் தேவை? என்ன வகையான பொருளாதார வளர்ச்சி தேவை என்பதுதான் மையமான கேள்வி. தாராளமய பொருளாதாரத்தின் தாசர்களும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் அமைச்சர் பெருமக்களும் அடிப்படைக் கட்டமைப்புத் துறையின் வளர்ச்சி என்று எதைக் குறிப்பிடுகிறார்கள்?

இதற்கு, எடுப்பானதொரு உதாரணத்தைப் பார்ப்போம்.

*''கர்நாடக மாநிலம், மழை குறைவாகப் பெய்யும் மாநிலம். பெரும்பாலான பகுதிகள் மானாவாரி நிலங்கள். வறுமையும் வேலையின்மையும் அதிக அளவில் உள்ள மாநிலம். இத்தகைய இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், இம்மாநிலம் பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைவதற்கு தகவல் தொழில்நுட்ப மையங்களை உருவாக்குவது மிக அவசியம். அடிப்படைக் கட்டமைப்புத் துறையின் வளர்ச்சி இல்லாமல் இதைச் சாதிக்க முடியாது''. (இந்தியன் எக்ஸ்பிரஸ், 16.5.05)*

**சென்னை - தாரமணியில் மினுமினுக்கும் தகவல் - தொழில்நுட்பப் பூங்கா. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, விவசாயிகள் போண்டியாவதை ஈடு செய்திடுமா?**




முதலில் உள்ள மூன்று வரிகளுக்குப் பின்னால் உள்ள வரிகளுக்கும் ஏதாவது தொடர்பிருக்கிறதா? முதலில் உள்ள மூன்று வரிகள் கர்நாடக மாநிலம் மழையும் பாசன வசதியுமின்றி விவசாயிகள் வறுமையில் உழலும் அவலத்தைக் குறிக்கிறது. எனவே, நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறிய அணைகள் கட்டுதல் முதலான அடிப்படைக் கட்டமைப்புத் துறையில் அரசு முதலீடு செய்து, விவசாய உற்பத்தி நடவடிக்கைகளுக்கு உதவவேண்டும் என்றுதான் ஒருவர் கருதுவார். ஆனால், ஆட்சியாளர்களும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் கிராமப்புற வறுமையைக் களைவதாக அடிப்படைக் கட்டமைப்புத் துறையின் வளர்ச்சியும் முதலீடுகளும் அமைய வேண்டியதில்லை என்கின்றனர். உற்பத்தியின் நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் அடிப்படைக் கட்டமைப்புத் துறைகள் அமைய வேண்டிய அவசியமில்லை என்கின்றனர். அதாவது, ஏற்றுமதிக்கான பொருட்கள் பெரிய துறைமுகங்களை, விமான நிலையங்களைச் சென்றடைவதற்காக போக்குவரத்து-தொலைத்தொடர்பு முதலான அடிப்படைக் கட்டமைப்புத் துறைக்கு முக்கியத்துவம் அளிப்பதும், அதில் பெருமளவு முதலீடு செய்வதும் அவசியம் என்கின்றனர். ஏகாதிபத்திய நாடுகளுக்கு கணினி மென்பொருள் ஏற்றுமதி செய்யும் தொழிலுக்கு வாய்ப்புகள் இருப்பதால், கணினி மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்கள்-தொலைதொடர்பு வசதி முதலான அடிப்படைக் கட்டமைப்புத் துறையில் அதிக முதலீடுகள் செய்ய வேண்டும் என்கின்றனர். இத்தகைய திட்டங்களில் முதலீட்டுப் பற்றாக்குறை நிலவுவதால், அன்னிய ஏகாதிபத்திய நிறுவனங்களை முதலீடு செய்ய வருமாறு அழைப்பு விடுக்கின்றனர்.

வெள்ளைக்காரனின் காலனிய ஆட்சிக் காலத்திலும் இப்படித்தான் நடந்தது. அன்றைய காலனிய ஆட்சி


படிப்பகம்

www.padippakam.com

விவசாயத்தையும் கைத்தொழிலையும் நாசமாக்கியது. பாசன மராமத்துப் பணிகளை அறவே புறக்கணித்தது. அதேசமயம், நாடெங்கும் இருப்புப் பாதைகளும் சாலைகளும் துறைமுகங்களும் நிறுவப்பட்டன. காலனியாதிக்கவாதிகளுக்குத் தேவையான உற்பத்திப் பொருட்கள் துறைமுகங்களுக்கு விரைவாகக் கொண்டு செல்லப்படுவதற்காக இவை அமைக்கப்பட்டன. காலனிய ஆட்சிக்காலத்தைப் போலவே இப்போது நான்கு வழி நெடுஞ்சாலைகளும், தொழில்நுட்பப் பூங்காக்களும், அதிவிரைவு ரயில் பாதைகளும், புதிய துறைமுகங்களும் நிறுவப்படுகின்றன. இது மறுகாலனியாதிக்கம்.



சென்னை-கத்திப்பாராவில் கட்டப்படும் மேம்பாலப் பணிகளைப் பார்வையிடும் மைய அமைச்சர் டி.ஆர்.பாலு; இந்த அடிக்கட்டுமான வளர்ச்சி, வேலையின்மையைக் குறைத்திடுமா?

கடந்த ஐந்தாண்டுகளில் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு (நான்கு பெரு நகரங்களுக்கிடையிலான தங்க நாற்கரண சாலைத் திட்டத்திற்கு) ரூ.24,000 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஆனால், சாலை வசதியற்ற 1,70,000 கிராமங்களுக்கு - பிரதமரின் கிராம வளர்ச்சிக்கான ''பாரத் நிர்மாண்'' திட்டத்தின் கீழ் ரூ.11,500 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமப்புற பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கும் செயலூக்கத்துக்கும் தொலைபேசியும் இணையதள இணைப்பும் அவசியமானது என்று கண்டுபிடித்துள்ள ஆட்சியாளர்கள், நடப்பு பட்ஜெட்டில் ரூ.1,200 கோடியை ஒதுக்கியுள்ளனர். ஏற்கெனவே பல தனியார் நிறுவனங்கள், கிராமப்புற தொலைத்தொடர்பு திட்டத்தில் முதலீடு செய்வதாகக் கூறி கோடிகோடியாய் மோசடி செய்து கொழுத்துள்ளன. இதுவும் போதாதென்று இன்னும் பல கோடிகளை இத்திட்டத்திற்கென மைய அரசு வாரியிறைத்து தொலைபேசி வசதியில்லாத 67,000 கிராமங்களுக்கு அச்சேவையை வழங்கப் போவதாக அறிவித்துள்ளது.

ஆனால், 1,25,000 கிராமங்களில் இன்னும் மின்சார வசதியே இல்லை. தேசிய மாதிரி கணக்கெடுப்பின்படி, 46% கிராமப்புற குடும்பங்கள் இன்னமும் லாந்தர் விளக்குகளையே சார்ந்துள்ளன. மாநில மின்வாரியங்கள் தனியார்மயமாக்கப்படுவதாலும் மின் கட்டண உயர்வினாலும் இந்த எண்ணிக்கை வருமாண்டுகளில் மேலும் அதிகரிக்கவே செய்யும். மேலும் கடந்த பத்தாண்டுகளாக கிராமப்புற வேலை வாய்ப்பின் வளர்ச்சி ஆண்டுக்கு வெறும் ஒரு சதவிகிதம் என்ற அளவுக்குச் சுருங்கி, இப்போது பூஜ்ஜியத்தை எட்டிவிட்டதாக அரசாங்கப் புள்ளிவிவரங்களே கூறுகின்றன. கும்பி கூழுக்கு அழுகையில் கொண்டைக்குப் பூ வைத்த கதையாக தொலைபேசி இணைப்புக்கு கோடிகோடியாய் வாரியிறைத்து, இதுதான் பொருளாதார வளர்ச்சி என்று ஆட்சியாளர்கள் காதில் பூ சுற்றுகின்றனர்.

கிராமப்புற வறுமையைக் களைவதாகவோ உற்பத்தியின் நடவடிக்கைகளுக்கு உதவுவதாகவோ அமையாத இத்தகைய அடிப்படைக் கட்டுமானத் துறைகள், தாராளமயத்தின் கீழ் தனியார்-அந்நிய நிறுவனங்கள் கொள்ளை லாபம் ஈட்டுவதற்கான துறைகளாக வளர்ந்துள்ளன. இதற்காகவே சேது சமுத்திர திட்டம், மகாநதி இணைப்புத் திட்டம், பெருநகரங்களில் சுரங்க ரயில் திட்டம், நகரங்களில் போக்குவரத்துக்கான மேம்பாலங்கள், மின்சார - சுரங்கத் திட்டங்கள் என்று பலப்பலத் திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. இவற்றில் அன்னிய முதலீடுகளும் குவிகின்றன. அல்லது முதலீட்டு பற்றாக்குறையைக் காரணம் காட்டி அன்னிய நிதி நிறுவனங்களிடம் பல்லாயிரம் கோடிக்கு கடன்கள் வாங்கப்படுகின்றன.

முன்பு வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட இந்திய ரயில்வே துறை, இப்படித்தான் அன்னிய தனியார் முதலாளிகளின் இலாப வேட்டைக்கான துறையாக இயங்கியது. இந்திய ரயில்வே துறையில் முதலீடு செய்யும் பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு இலாப உத்தரவாதத்துடன் அசலைத் திருப்பித் தருவதாக அன்றைய காலனிய அரசு உறுதியளித்தது. காலனிய இந்திய நாட்டைச் சூறையாடுவதற்கான முதன்மையான அடிப்படைக் கட்டமைப்புத் துறையாக அன்றைய ரயில்வே துறை அமைந்தது.

அதேபோலத்தான் தாராளமயத்தின்கீழ் மின்சார உற்பத்தி, சுரங்கத் தொழில், எண்ணெய் - எரிவாயு துரப்பன வேலைகள், நான்குவழி அதிவிரைவுச் சாலைகள், தொலைத்தொடர்பு - என பல்வேறு அடிப்படைக் கட்டமைப்புத் துறைகளிலும் இலாப உத்தரவாதத்துடன் அன்னிய தனியார் முதலீடுகள் தாராளமாக அனுமதிக்கப்படுகின்றன. இப்படி இலாப உத்தரவாதத்துடன் அமெரிக்க என்ரான் மின் உற்பத்தி நிறுவனம் அனுமதிக்கப்பட்டு, அது மகாராஷ்டிர மாநில மின்சார வாரியத்தை திவாலாக்கிய கதையை நாடே நன்கறியும்.

இரயில்வே மேம்பாலங்கள், நான்கு வழிச்சாலைகள், கணினி தொழில்நுட்பப் பூங்காக்கள், விரைந்து செல்லும் வாகனங்கள் - இவற்றையெல்லாம் பார்த்து நாடு ரொம்பவும் முன்னேறிவிட்டதாக நாமும் நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அடிப்படைக் கட்டமைப்புத் துறையின் வளர்ச்சி-முன்னேற்றம் என்ற மாய்மாலங்களுக்குப் பின்னே மறைந்திருப்பது மறுகாலனியாதிக்கக் கொள்ளை. இது நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்கான நல்வழிச்சாலை அல்ல. நாட்டையும் மக்களையும் சூறையாடும் மறுகாலனியாதிக்கத்தின் சுடுகாட்டுச் சாலை!

● மனோகரன்

www.padippakam.com

## திருநெல்வேலி கருத்தரங்கம்

# கோக் நுழைகிறது தாமிரவருணி எரிகிறது

மறுகாலனியாதிக்கத்தின் கொடிய வெளிப்பாடான தண்ணீர் தனியார்மயத்திற்கு எதிராகவும், அதன் துலக்கமான வெளிப்பாடான ''கோக்''கிற்கு எதிராகவும் மக்கள் கலை இலக்கியக் கழகம், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து தமிழகமெங்கும் கடந்த மூன்று மாதங்களாக நடத்திவந்த பிரச்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக, செப்.3 அன்று, திருநெல்வேலி, கொக்கிரக்குளம் பகுதியில் அமைந்துள்ள ரோஸ் மகாலில், ''தண்ணீரைத் தனியார்மயமாக்காதே!'' ''தாமிரவருணியை 'கோக்'கிற்கு விற்காதே!'' எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

ம.க.இ.க. பொதுச் செயலர் தோழர் மருதையன் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில், மலையாள மொழி நாளிதழ் ''மாத்ருபூமி''யின் நிர்வாக இயக்குநரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. எம்.பி. வீரேந்திர குமார் தவிர, பிற பேச்சாளர்கள் அனைவரும் வாக்களித்தபடி கலந்து கொண்டனர். திரு. வீரேந்திரகுமார் தனது சொந்த அலுவல் காரணமாக கலந்து கொள்ள இயலவில்லை எனக் கருத்தரங்கில் அறிவிக்கப்பட்டது. அதேபொழுதில், நெல்லை வழக்குரைஞர் சங்கத் தலைவர் தங்கசாமி பேச்சாளராக அறிவிக்கப்படாத போதிலும், இப்போராட்டத்தின் அவசியத்தைக் கருதி, தானே முன் வந்து சிறப்புரையாற்றினார். கருத்தரங்கில் அறிஞர்களின் சிறப்புரையோடு, ம.க.இ.க. மையக் குழுவின் புரட்சிகரக் கலை நிகழ்ச்சியும், நாடகங்களும், ஓவியக் கண்காட்சியும் நடத்தப்பட்டன.

''தண்ணீர் வியாபாரத்தை, ஏதோவொரு தவறான பொருளாதாரக் கொள்கை எனச் சுருக்கிப் பார்க்காமல், அதனை மனிதகுலத்திற்கு எதிரான பயங்கரவாதமாகவும்; மறுகாலனியாக்கத்தின் கோர வடிவமாகவும் பார்க்க வேண்டும்'' என வலியுறுத்தியது இக்கருத்தரங்கம். கருத்தரங்கை நடத்திய இப்புரட்சிகர அமைப்புகள் மட்டுமின்றி, பேச்சாளர்கள் அனைவருமே இந்த அரசியல் கருத்தை வலியுறுத்திப் பேசியதுதான் இக்கருத்தரங்கின் வெற்றியாக அமைந்தது.

தோழர் மருதையன் கருத்தரங்கின் இறுதியில் தனது தொகுப்புரையில், ''யாரோ செய்வார்கள்; ஏதாவது நல்லது நடக்கும் எனச் செயலற்று இருப்பது அவநம்பிக்கை'' எனக் குறிப்பிட்டார். அந்த அவநம்பிக்கையை உடைத்தெறியும் விதத்தில், இக்கருத்தரங்கம் நடந்து முடிந்தது. புதிய ஜனநாயகம் வாசகர்களுக்காக, இக்கருத்தரங்கின் சிறப்புரைகளைச் சுருக்கமாகத் தொகுத்து வெளியிடுகிறோம்.

— ஆசிரியர் குழு

## ''தண்ணீர் தனியார்மயம் என்பது மறுகாலனியாதிக்கத்தின் அங்கம்; அதை எதிர்த்துப் போராடாமல் இருப்பது அவமானம்!''

*— தோழர் மருதையன், பொதுச் செயலர், ம.க.இ.க.*

''தாமிரவருணியை உறிஞ்ச வரும் அமெரிக்க கோக்கை அடித்து விரட்டுவோம்!'' என்ற முழக்கத்தின் அடிப்படையில், கடந்த மூன்று மாதங்களாக தமிழகமெங்கும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் நடத்திவரும் இயக்கத்தை, கோக்கிற்கு எதிரான இயக்கமாக மட்டும் சுருக்கிப் பார்க்கக் கூடாது; தண்ணீரை இலாபம் தரும் பண்டமாக மாற்றும், நீர் ஆதாரங்களைத் தனியார் / பன்னாட்டு முதலாளிகளின் தனிச்சொத்தாக ஒப்படைக்கும் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான போராட்டங்களின் ஓர் அங்கமாக இதனைக் காண வேண்டும்'' எனத் தனது தலைமை உரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட்ட தோழர் மருதையன், ''போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு, தாமிரவருணி கோக்கிற்கு விற்கப்படுவதை எதிர்த்துப் போராடும் பல்வேறு அமைப்புகளுக்கும், நமக்கும் உள்ள வேறுபாடு இதில்தான் அடங்கியிருக்கிறது. அவர்கள் இதனைத் தவறான பொருளாதாரக் கொள்கையாகப் பார்க்கிறார்கள். நாம் இதனை மறுகாலனியாதிக்கத்தின் அங்கம் எனக் குறிப்பிட்டு எதிர்த்துப் போராடுகிறோம்'' என விளக்கினார்.

''இந்தியாவிலேயே இராசஸ்தானுக்கு அடுத்து வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை உள்ள மாநிலம் தமிழ்நாடு; தமிழ்நாட்டின் 72 சதவீத நிலத்தடி நீர் குடிப்பதற்கு இலாயக்கற்றது; தமிழ்நாட்டின் 20 மாவட்டங்கள் நிலத்தடி நீரே அற்றுப் போன கருப்பு மாவட்டங்கள் - இவையெல்லாம் அரசே தரும் புள்ளி விவரங்கள்''

''தாமிரவருணி ஆற்றுப் படுகையில் உள்ள சீவலப்பேரி குடிநீர் திட்டத்தை இராமநாதபுரம் வரை கொண்டு வரவேண்டும் என அம்மாவட்ட மக்கள் நெடுங்காலமாகக் கோரி வருகிறார்கள். கங்கை கொண்டான் பகுதி மக்கள் கோடகன் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றக் கோருகிறார்கள். இப்படி குடிதண்ணீருக்காக அலைபாயும் மக்களிடம் கழிவுநீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்தலாம் என உபதேசிக்கும் தமிழக அரசு, தாமிரவருணியைக் கோக்கிற்குத் தூக்கிக் கொடுக்கிறது'' எனத் தமிழகத்தின் எதிரும் புதிருமான நிலைமையைச் சுட்டிக் காட்டினார்.

''கோக் ஆலை வந்தால் வேலைவாய்ப்பு பெருகும் என்கிறார்கள். இதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. ஆனால், நிலத்தடி நீர் கெட்டுப் போகும் என்பதற்கு உத்தரவாதம் உண்டு''

''ஒரு லிட்டர் கோக் தயாரிக்க ஏழு லிட்டர் நல்ல தண்ணீர் போதும் எனக் கூறுகிறது கோக். அதாவது கோக்கின் கணக்குப்படி, ஒரு லிட்டர் கோக் தயாரித்தது போக, மீதி ஆறு லிட்டர் தண்ணீர் கழிவு நீராக வெளியேற்றப்படும். பூமிக்குள் இறங்கும் 1 லிட்டர் கழிவுநீர் 8 லிட்டர் நல்ல நீரை மாசுபடுத்தும் என்ற அறிவியல் உண்மையின்படி பார்த்தால், 1 லிட்டர் கோக் தயாரிக்கும்பொழுது 48 லிட்டர் (நிலத்தடியில் உள்ள) நல்ல நீர் கழிவு நீராக மாறும்'' என்ற அபாயத்தை எடுத்துச் சொன்னதோடு, இதனால்தான் கேரளாவில் கோக் ஆலை


படிப்பகம்

www.padippakam.com

அமைந்துள்ள பிளாச்சிமடா கிராமம் சுடுகாடாகிவிட்டது'' எனச் சுட்டிக் காட்டினார்.

''நிலத்தடி நீர் உள்ளூர் மக்களுக்குச் சொந்தமா? இல்லை ''கோக்'' போன்ற பன்னாட்டு முதலாளிகளுக்குச் சொந்தமா? என்ற வழக்கு உச்சநீதி மன்றத்தின் விசாரணையில் இருக்கிறது. ஆனால், நெல்லை மாவட்ட போலீசோ கோக்கிற்கு எதிராகப் பேசக் கூடாது எனத் தடை விதிக்கிறது. நெல்லை, குமரி, விருதுநகர் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கோக்கிற்கு எதிராக பொதுக்கூட்டம் - தெருமுனைப் பிரச்சாரம் நடத்த போலீசு அனுமதிக்கவில்லை. இந்த மூன்று மாவட்டங்களிலும் ஒரு சோடா கலர் கம்பெனியின் ஆட்சிதான் நடக்கிறது என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்? 'கோக்'கிற்கு எதிராக திருநெல்வேலியில் சுவரெழுத்து எழுதியதற்காக ராஜதுரோக குற்றச்சாட்டின் கீழ் தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள். இது மறுகாலனியாதிக்க ஆட்சிதான் என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்?'' எனக் கேள்வி எழுப்பிய தோழர் மருதையன், இதன் மூலம் நாடு மீண்டும் அடிமையாக்கப்படுவதை அம்பலப்படுத்தினார்.

## ''நீதிமன்றம் பொதுவானது என்பது மாயை!''

### — திரு. தி. லஜபதிராய், வழக்குரைஞர், மதுரை உயர்நீதி மன்றம், மதுரை.

''இந்திய நீதிமன்றங்களின் வர்க்கச் சார்பு'' குறித்து உரையாற்றிய வழக்குரைஞர் லஜபதிராய், இதற்கு ஆதாரமாக, 1970-இல் சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த மறைந்த தலைவர் ஈ.எம்.எஸ்., ஒரு நீதிமன்றத் தீர்ப்பை, வர்க்கச் சார்பு கொண்டது என விமர்சித்ததற்காகத் தண்டிக்கப்பட்டது தொடங்கி, இன்றுவரை உள்ள பல்வேறு நீதிமன்றத் தீர்ப்புகளைச் சுட்டிக் காட்டினார்.

''நர்மதை நதியின் குறுக்கே சர்தார் சரோவர் அணை கட்டப்படுவதற்குத் தடை விதிக்கக் கோரி நர்மதை பாதுகாப்பு இயக்கம் தொடுத்த வழக்கை விசாரித்த உச்சநீதி மன்றம், நர்மதை நதி பழங்குடி மக்களுக்குச் சொந்தமானதா? இல்லை கரும்பு ஆலை முதலாளிகளுக்குச் சொந்தமானதா? என்பதற்குள் நாங்கள் நுழைய முடியாது எனக் கூறிய கையோடு, அணையைக் கட்டுவதற்கு அனுமதி தந்து, பழங்குடி மக்களுக்கு எதிராகத் தீர்ப்புக் கொடுத்தது.''

''பழங்குடி மக்களின் ஒரு ஏக்கர் நிலத்திற்கு ரூ. 1,000 நட்டஈடு தந்து, அவர்களை நிலத்தில் இருந்து அப்புறப்படுத்த அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. 'நீதிபதிகளுக்கு, அவர்களின் சம்பளத்திற்குப் பதிலாக ஒரு கூடை சாணியைக் கொடுத்தால் வாங்கிக் கொள்வார்களா?' என இத்தீர்ப்பை விமர்சித்து எழுதியதற்காக எழுத்தாளர் அருந்ததி ராய் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டது. அவர் நீதிமன்றங்களுக்கு எதிராகக் கோஷம் போட்டார் என்ற 'குற்றத்திற்காக', அவரை ஒரு நாள் டெல்லி திகார் சிறையில் அடைத்துத் தண்டித்தது, உச்சநீதி மன்றம்.''

''உ.பி. முதல்வராக இருந்த கல்யாண் சிங் பாபர் மசூதியை அப்படியே பாதுகாப்பேன் என நீதிமன்றத்திற்கு வாக்குக் கொடுத்துவிட்டு, அம்மசூதியை இந்து மதவெறிக் கும்பல் இடித்துத் தள்ள துணை போனார். இதனையடுத்து நடந்த கலவரத்தில், ஆயிரக் கணக்கான முசுலீம்கள் கொல்லப்பட்டனர். இதற்கு நீதிமன்றம் கல்யாண் சிங்குக்கு அளித்த தண்டனை 'நீதிமன்றம் கலையும் வரை, குளு குளு நீதிமன்ற அறையிலேயே, உட்கார்ந்து இருக்க வேண்டும்' என்பதுதான். அருந்ததி ராய்க்கும், கல்யாண் சிங்குக்கும் அளிக்கப்பட்ட தண்டனைகளை ஒப்பிட்டாலே, நீதிமன்றத்தின் வர்க்கச் சார்பை புரிந்து கொள்ள முடியும்'' என்ற அவர், பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்களுள் ஒருவர்கூட இதுவரை உச்சநீதி மன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்படவில்லை; 1950 தொடங்கி 2005 வரையில் இதுவரை நான்கு தாழ்த்தப்பட்டோர்தான் உச்சநீதி மன்றத்தில் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்ற அநீதியையும் சுட்டிக் காட்டினார்.

''உலகில், இந்தியாவைத் தவிர, வேறெந்த ஜனநாயக நாட்டிலும், குடிமக்களை விசாரணையின்றித் தண்டிக்கும் தடுப்புக் காவல் சட்டங்கள் கிடையாது. மிசா, தடா, தேசிய பாதுகாப்புச் சட்டம், பொடா ஆகிய அனைத்து கருப்புச் சட்டங்களுக்கும் அங்கீகாரம் அளித்து, மக்களின் உரிமைகளை நசுக்குவதில் நீதிமன்றங்கள் அரசுக்கு விசுவாசமாகவே நடந்து வந்துள்ளன'' எனக் குறிப்பிட்டு, நீதிமன்றங்களின் ஜனநாயக முகமூடியைத் திரைகிழித்தார், அவர்.

''கல்வி பிரச்சினையை எடுத்துக் கொண்டால், தனியார் கல்லூரிகளில் ஏழைகளின் இட ஒதுக்கீட்டை ரத்து செய்த உச்சநீதி மன்றம், வெளிநாடுகளில் வாழும் பணக்கார இந்தியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க உத்தரவிடுகிறது.''

''சிறுபான்மையினர் உரிமை பிரச்சினையை எடுத்துக் கொண்டால், பாபர் மசூதி இருந்த வளாகத்தைக் கையகப்படுத்தி, ஒரு தலைப் பட்சமாக இந்துக்களுக்கு மட்டும் வழிபாட்டு உரிமையை உத்தரவாதம் செய்யும் மைய அரசின் சட்டத்தை, நீதிமன்றம் அங்கீகரிக்கிறது.''

''இப்படி ஏராளமான வழக்குகளில் மக்கள் விரோதமாகத்

கருத்தரங்கில் தலைமை உரையாற்றிய தோழர் மருதையன்; (சிறப்பு பேச்சாளர்கள் இடமிருந்து) வழக்குரைஞர் லஜபதிராய்; திரு. சி.எஸ்.மணி; தோழர் ராஜேந்திர சாரங்கி; திரு.வெள்ளையன்; வழக்குரைஞர் திருமலைராசன்; வழக்குரைஞர் தங்கசாமி மற்றும் தோழர் ஆனந்த் தெல்தும்ப்டெ.



www.padippakam.com

தீர்ப்பளித்துள்ள நீதிமன்றங்கள், தேசிய கீதம் பாடுவது தொடர்பான வழக்கு உள்ளிட்டு, ஏதோ சில வழக்குகளில் நியாயமாகத் தீர்ப்பு வழங்கினால், அதை 'நீதிமன்ற லாட்டரி பரிசு' என்றுதான் பார்க்க முடியும்.''

''உதாரணமாக, கங்கையில் ஆலைக் கழிவுகளைக் கொட்டி அந்நதியை மாசுபடுத்தி வந்த 60,000 தொழிற்சாலைகளுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில், கழிவை சுத்திகரித்து வெளியேவிடும் ஆலைகள்தான் இயங்க முடியும் என்று நீதிபதி குல்தீப் சிங் தீர்ப்பளித்தார். ஆனால் இந்தத் தீர்ப்பு வந்த ஒரே மாதத்திற்குள், 60,000 ஆலைகளும், 'நாங்கள் கழிவைச் சுத்திகரித்துதான் வெளியே அனுப்புகிறோம்' என அரசாங்கத்திடம் ஒரு சான்றிதழை வாங்கி வைத்துக் கொண்டு, ஆலைகளை நடத்தத் தொடங்கிவிட்டார்கள். நீங்கள் கோக்கிற்கு எதிராக வழக்கு தொடுத்தால், இப்படிக்கூட நடக்கலாம்'' என எச்சரித்து, நீதிமன்றங்களின் மக்கள் விரோதத் தன்மையை தொட்டுக் காட்டினார், வழக்குரைஞர் லஜபதி ராய்.

## ''இது மக்களாட்சியல்ல; பன்னாட்டு நிறுவனங்களின் அடிவருடி ஆட்சி''

### — வழக்குரைஞர் தங்கசாமி, நெல்லை வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர்

''கங்கை கொண்டானில் கோக் ஆலையை அனுமதிக்கக் கூடாது என்று கோரி, 1,000 வழக்குரைஞர்கள் கையெழுத்துப் போட்ட மனு ஒன்றை மாவட்ட ஆட்சியாளரிடம் கொடுத்திருக்கிறோம். ஆனால், மனு கொடுப்பதால் மக்கள் பிரச்சினை தீர்ந்துவிடாது; சட்டத்தின் மூலமும் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. மக்கள் பிரச்சினைகளை மக்களின் போராட்டங்கள் மூலமே தீர்க்க முடியும்'' எனக் குறிப்பிட்ட அவர், இதனைத் தனது பொது வாழ்க்கை அனுபவத்தில் இருந்தும், வழக்குரைஞர் தொழில் அனுபவத்தில் இருந்தும் உணர்ந்து கொண்டதாகக் கூறினார்.

''இந்திய அரசியல் சாசனத்தின் 21-ஆவது பிரிவு உணவு, காற்று, நீர், வசிப்பிடம் ஆகிய அடிப்படை வசதிகளைச் செய்து தருவது அரசின் கடமை எனக் குறிப்பிடுகிறது. ஆனால், இந்த அடிப்படை வாழ்வியல் உரிமையைப் பறிக்கும் முதல் நிறுவனம் அரசுதான். எனவே, இந்த அரசு, ஒரு பயங்கரவாத அரசு. பன்னாட்டு நிறுவனங்கள் தொடர்ந்து கொள்ளையடிக்க உதவும் பயங்கரவாத அரசு'' என இந்திய அரசின் ஏகாதிபத்திய அடிவருடித்தனத்தை அம்பலப்படுத்தினார், வழக்குரைஞர் தங்கசாமி.

''வரலாற்றுச் சிறப்புமிக்க பொருணை (தாமிரவருணி) நதியைக் கொள்ளையடிக்க கோக்கை அனுமதிப்பது கேவலம். இந்தக் கேவலத்தை எதிர்த்துப் போராடுவதன் மூலம், நெல்லை வீரஞ்செறிந்த மண்தான் என்பதை மீண்டும் நிருபிக்கும் வாய்ப்பு நெல்லை மக்களுக்குக் கிடைத்திருக்கிறது'' எனக் குறிப்பிட்டு, நெல்லை மாவட்ட மக்களின் வரலாற்றுக் கடமையைச் சுட்டிக் காட்டினார்.

## ''கோக் அடிவருடி அதிகாரிகளை அம்பலப்படுத்த வேண்டும்''

### — வழக்குரைஞர் ப.திருமலைராசன், பொதுச்செயலர், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி கீழமை நீதிமன்றங்களின் வழக்குரைஞர்கள் சங்கக் கூட்டமைப்பு.

''ஆந்திர மாநிலத்தில் கோக்கையும், பெப்சியையும் பயிருக்குப் பூச்சி மருந்தாக அடிக்கிறார்கள். பூச்சியைக் கொல்லும் பெப்சியை / கோக்கை நம்மைக் குடிக்க கட்டாயப் படுத்துகிறார்கள்'' என இந்திய கோக் பானங்களின் தரத்தை அம்பலப்படுத்திய வழக்குரைஞர் திருமலைராசன், ''இந்தியச் சட்டங்களை மிக மென்மையாக மாற்ற வேண்டும் எனப் பன்னாட்டு நிறுவனங்கள் கோருகின்றன. இதற்கு ஏற்ப உரிமையியல் சட்டத் திருத்தம் கொண்டு வந்தார்கள். இதற்கு அடுத்து, இலவச சட்டப் பணிக் குழுவை, பேரம் பேசித் தீர்த்து வைக்கும் அமைப்பாக மாற்ற முயற்சி செய்தார்கள். இதற்கு எதிராக, அகில இந்திய வழக்குரைஞர் சங்கம் வழக்கு தொடுத்தது.''

''உச்சநீதி மன்றத்தில் இவ்வழக்கை விசாரித்த சி.ஜே.கிருபால் என்ற நீதிபதி, இந்த வழக்கு விசாரணையில் இருக்கும் பொழுதே, அவர் தில்லியில் நடந்த ஒரு வர்த்தகக் கருத்தரங்கில், இந்தியச் சட்டங்களைப் பார்த்து யாரும் பயப்படத் தேவையில்லை; தொழில் பிரச்சினைகளைப் பேரம் பேசித் தீர்த்து வைக்கும் சட்டம் (arbitration and concilation) இந்தியாவில் வந்து விட்டது எனப் பேசினார். சி.ஜே. கிருபால் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர வேண்டும் என நாங்கள் போட்ட மனுவிற்கு, உச்சநீதி மன்றம் பதிலே அளிக்கவில்லை. சி.ஜே.கிருபால் போன்ற நீதிபதிகள் இருந்தால், கோக்கிற்கு எதிரான வழக்கு என்னவாகும்?'' என நீதிமன்றங்கள் / நீதிபதிகளின் யோக்கியதையை அம்பலப்படுத்தினார்.

''பிளாச்சிமடாவில் கோக்கிற்கு எதிரான போராட்டத்தில் பெண்கள்தான் முன்னணியில் இருக்கிறார்கள். அந்த மக்களின் நிர்ப்பந்தத்தால்தான் கேரள அரசு உச்சநீதி மன்றத்தில் கோக்கிற்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கிறது.''

கருத்தரங்கில் வைக்கப்பட்டிருந்த ஓவியக் கண்காட்சியை பார்வையிடும் பொதுமக்கள்.



''எனவே, தண்ணீர் வியாபாரப் பண்டமாக மாற்றப்படுவதற்கு எதிராக அனைத்துத் தரப்பு மக்களையும் திரட்டிப் போராட வேண்டும். வெறும் அடையாள போராட்டமாக இது நின்றுவிடக் கூடாது'' எனக் கேட்டுக்கொண்டார்.


படிப்பகம்

www.padippakam.com

## "தண்ணீர் கொள்ளைக்குக் காரணம், உலக வர்த்தகக் கழக ஒப்பந்தம்!"

### —த. வெள்ளையன், தலைவர், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை

"குடிப்பதற்கு குடிநீர் இல்லை; பாசனத்திற்கு நீர் இல்லை; காவிரி நீர் இல்லை; முல்லைப் பெரியாறு தண்ணீர் நமக்கு இல்லை - இப்படி, தமிழகம் இருக்கும் நிலையில், ஆற்றுநீரை அந்நியர்கள் பயன்படுத்த அனுமதிக்கலாமா?'' என்று கேள்வி எழுப்பிய த.வெள்ளையன்,

''தமிழகமெங்கும் ம.க.இ.க.வின் சுவரெழுத்துக்களைப் பார்த்தேன். எந்தவொரு அரசியல் கட்சியாவது மக்கள் பிரச்சினைகளுக்காகச் சுவரெழுத்து எழுதியதுண்டா? மாறாக, தலைவர்களின் பிறந்தநாளுக்குத் தான் எழுதுகிறார்கள்'' என ஓட்டுக்கட்சிகள் மக்கள் பிரச்சினைகளைப் புறக்கணிப்பதை விவரித்தார்.



கருத்தரங்கில் கலந்து கொண்ட பார்வையாளர்களில் ஒரு பகுதி.

''தாமிரவருணி குடிநீர் கடாம்பக்குளம் வரை செல்லவில்லை. தாமிரவருணி கரைபுரண்டு ஓடினால்கூட, கடைமடை வரை தண்ணீர் திறந்துவிட மறுக்கிறார்கள். மணற் கொள்ளை தடைபட்டுப் போகும் என்பதால்தான் தண்ணீர் திறந்துவிடுவதில்லை. ஏற்கெனவே ஸ்டெர்லைட், ஸ்பிக் ஆகிய ஆலைகள் தாமிரவருணி தண்ணீரை உறிஞ்சிக் கொள்வதால், தண்ணீர் பஞ்சம் நிலவுகிறது. இடையே அந்நியர்களையும் தண்ணீரை உறிஞ்ச அனுமதிப்பது மன்னிக்க முடியாத குற்றம்''

''தண்ணீர் கொள்ளை, கல்விக் கொள்ளை போன்ற நாட்டைப் பிடித்துள்ள கேடுகளுக்குக் காரணம், உலக வர்த்தகக் கழக ஒப்பந்தம். இயற்கை வளங்களை நாம் பயன்படுத்துவதற்குக் கூட வரைமுறை வேண்டும்; பிறகு அந்நியன் வகை தொகையின்றிப் பயன்படுத்த அனுமதிக்கலாமா?'' என்பதைச் சுட்டிக்காட்டிய த.வெள்ளையன், ''சேதாரம் இல்லாமல் நகை செய்ய முடியாது; ஒரு சிலர் உயிர் இழக்காமல் பகை வெல்ல முடியாது'' என மக்கள் எழுச்சி ஏற்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

## "எங்கள் பகுதி பாலைவனமாகி விடக் கூடாது என்பதற்காகப் போராடுகிறோம்"

### —திரு. சி.எஸ்.மணி, மானூர் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர், கங்கை கொண்டான்

மானூர் ஊராட்சி ஒன்றியத்தில் கோக் நிறுவனத்திற்கு அனுமதி தரக் கூடாது எனத் தீர்மானம் கொண்டு வந்த சி.எஸ்.மணி, ''கோக், கங்கைகொண்டானுக்கு வருவது வெளியே தெரிந்தவுடனேயே, பல்வேறு அமைப்பினரும், அறிஞர்களும் எங்கள் பகுதிக்கு வந்து, இதனால் ஏற்படும் கேடுகளைச் சொன்னபோது, அதை நாங்கள் நம்பவில்லை. அதேசமயம், எங்கள் பகுதியைச் சேர்ந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், விவசாய சங்கத் தலைவர்கள் என 40 பேர் சேர்ந்து கேரளாவிலுள்ள பிளாச்சிமடாவுக்கும், சிவகங்கைக்கு அருகிலுள்ள படமாத்தூருக்கும் நேரடியாகப் போய் விசாரித்தோம். பிளாச்சிமடாவில் இந்த கோக் ஏற்படுத்தியிருக்கும் கேடுகளைப் பார்த்த பிறகுதான், இந்த ஆலையை எதிர்த்துத் தீர வேண்டும் என முடிவு செய்து, கடந்த ஏழு மாதங்களாகப் போராடி வருகிறோம்'' எனத் தமது போராட்ட அனுபவத்தை முன்வைத்தார்.

''சீவலப்பேரி குடிநீர் திட்டம் திருநெல்வேலியில் இருந்து கோவில்பட்டி வரை போகிறது. இந்தக் குழாய் போகும் வழியில் உள்ள கிராமங்களில் இதுவரை மேல்நிலைத் தண்ணீர் தொட்டி இருந்தது கிடையாது. கிராமத்து மக்கள் குடிநீரை பைப்பில் இருந்து நேரடியாகப் பிடித்துக் கொள்வார்கள். இப்பொழுது, 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டிகளைக் கிராமங்களில் கட்டுகிறார்கள். கிராமத்திற்குத் தண்ணீர் இவ்வளவுதான். மீதமெல்லாம் கோக்கிற்கு என்பதுதான் இதன் பொருள்.''

''கோக்கிற்கு ஆதரவாகப் பேசும் ஊராட்சி மன்ற உறுப்பினர்களைக் கூட்டி வைத்து, ஆர்.டி.ஓ. இரகசியமாக கங்கை கொண்டானில் கூட்டம் போட்டார். விசயம் தெரிந்து கோக்கை எதிர்க்கும் நாங்களும் கூட்டத்திற்குப் போனபொழுது, அடிதடி நடக்கப் போவதாக ஃபோன் போட்டு போலீசைக் கூப்பிட்டார்கள்.''

''நாங்கள் பெட்டிக்காகத்தான் கோக்கை எதிர்த்துப் போராடுவதாகவும்; நாங்கள் 25 இலட்ச ரூபாய் கேட்பதாகவும்; கோக் 15 இலட்சம் தரத் தயாராக இருப்பதாகவும் - ஒரு அவதூற்றை கோக் பரப்பி வருகிறது. பெட்டிக்காகப் போராடும் தந்திரமான கூட்டம் நாங்கள் இல்லை. நாங்கள் எங்கள் உரிமைக்காகப் போராடுகிறோம். எங்கள் பகுதியிலேயே தொடர்ந்து வாழனும் என்பதற்காகப் போராடுகிறோம். எங்கள் பகுதி பாலைவனமாகி விடக்கூடாது என்பதற்காகப் போராடுகிறோம்.''

''கங்கை கொண்டான் குளத்தை ஐந்து இலட்ச ரூபாய் செலவில் தூர்வார ஆரம்பித்தது கோக். பி.டபிள்யு.டி. செய்ய வேண்டிய வேலையை நீ ஏன் செய்யணும்? மறைந்த கங்கை கொண்டான் ஊராட்சி மன்றத் தலைவர் கம்சன், கோக்கிற்கு எதிராக பஞ்சாயத்தில் தீர்மானம் கொண்டு வந்தவுடன், இந்த தூர்வாரும் வேலையை கோக் நிறுத்திவிட்டது. இலாப-நட்டக் கணக்குப் போட்டு 'சேவை' செய்வது யார் என்பது இதிலி

www.padippakam.com

ருந்து தெரியவில்லையா?

''அரசாங்கம் ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் குழந்தைகளுக்கு மஞ்சள் காமாலை தடுப்பூசி போட்டு வருகிறது. இது போதாதென்று, இப்பொழுது கோக்கும் மஞ்சள் காமாலை தடுப்பூசி முகாம் ஏன் நடத்தனும்? கோக் ஆலை வந்த பிறகு பிளாச்சிமடாவில் மஞ்சள் காமாலை, ஆஸ்துமா, மாதவிடாய் பிரச்சினை, போலியோ போன்ற வியாதிகள் தீவிரமாகப் பரவியிருப்பதை நாங்கள் நேரடியாகவே பார்த்தோம். நாளைக்கு இந்தப் பகுதியிலும், மஞ்சள் காமாலை பரவும் என்பதால், இப்பொழுதே கோக் தடுப்பூசி போடுகிறது''

''நோயாளிக்கு மருந்துதான் வாங்கி கொடுப்பார்கள். ஆனால், கோக் நிர்வாகமோ, மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டிருந்த கங்கை கொண்டான் ஊராட்சி மன்றத் தலைவர் கம்சனைக் குற்றாலத்திற்குக் கூட்டிப் போய் சீமை சாராயத்தால் குளிப்பாட்டியிருக்கிறது. குற்றாலத்துக்குப் போக கம்சனுக்கு வழி தெரியாதா? நோயாளிக்கு சாராயத்தை ஊற்றிக் கொடுப்பது, விஷத்தை ஊற்றிக் கொடுப்பதற்குச் சமமாகாதா?'' எனச் சாம, பேத, தான, தண்டங்களைப் பயன்படுத்தி கோக் நிர்வாகம், கங்கை கொண்டானில் ஆலையை நிறுவ முயல்வதை எடுத்துக் கூறினார், சி.எஸ்.மணி.

## ''தண்ணீர் தனியார்மயம் என்பது ஏழைகளின் வாழ்வுரிமையைப் பறிப்பதாகும்!''

***— ராஜேந்திர சாரங்கி, அமைப்பாளர், லோக் பாக்யா, புவனேசுவர், ஒரிசா.***

''**த**ண்ணீர் தனியார்மயத்துக்கு எதிரான ஒரிசாவின் போராட்ட அனுபவத்தை, நான், தமிழகத்திலும், இந்தியா வெங்கிலுமே காண்கிறேன்'' எனக் குறிப்பிட்ட ராஜேந்திர சாரங்கி, உலக வங்கியின் கட்டளைப்படி நீர் ஆதாரங்களைத் தனியார்மயமாக்கும் முதல் கட்டமாக, ஒரிசாவில் ''பாணி (தண்ணீர்) பஞ்சாயத்துக்கள்'' கட்டப்பட்ட வரலாற்றையும், தண்ணீரைத் தனியார்மயமாக்க தமிழக அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகளையும் ஒப்பிட்டு விவரித்தார்.

''1995-ஆம் ஆண்டு ஒரிசாவில், ''ஒரிசா தண்ணீர் ஒருங்கிணைப்புத் திட்டம்'' உருவாக்கப்பட்டது. இதே திட்டம், அப்பொழுதே தமிழகத்திலும் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு 2,500 கோடி ரூபாய் கடனாகக் கொடுத்த உலக வங்கி, இதற்கு நிபந்தனையாக ஒரிசாவில் பாணி பஞ்சாயத்துக்களை உருவாக்க வேண்டும் எனக் கட்டளையிட்டது.''

''நீர் நிலைகளைப் பராமரிப்பது; பாசனத்திற்கு நீரை விநியோகிப்பது; பாசன நீருக்கு கட்டணம் நிர்ணயித்து, அதை விவசாயிகளிடம் வசூலிப்பது ஆகிய பணிகள் பாணி பஞ்சாயத்து அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டன. இதை வேறு மாதிரியாகச் சொன்னால், அரசாங்கத்திடம் இருந்து வந்த பாசனத்துறை இழுத்து மூடப்பட்டு, அது கிராமப்புற பணக்கார விவசாயிகளிடம் ஒப்படைக்கப்பட்டது;''

''நிலமற்ற கூலி விவசாயிகள், குத்தகை விவசாயிகள் இப்பாணி பஞ்சாயத்துக்களில் உறுப்பினராகச் சேர முடியாது என்ற விதியின் மூலம், பாசன நீரின் மீது அவர்களுக்கு இருந்துவந்த உரிமை மறுக்கப்பட்டு, பாசன நீர் பணக்கார விவசாயிகளின் தனிச் சொத்தாக்கப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரிசாவில் பாணி பஞ்சாயத்து சட்டம் இரண்டு கம்யூனிஸ்டு சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேறியது.''

''ஒரிசா மாநிலத்தில் 12,000 பாணி பஞ்சாயத்துக்கள் செயல்படுவதாக அம்மாநில அரசு கூறினாலும், அவையெல்லாம் வெறும் காகிதத்தில்தான் இருக்கின்றன. சமீபத்தில் கூட, 1996-லேயே உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வருவதாகக் கூறப்பட்ட 25 பாணி பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒட்டு மொத்தமாக பதவி விலகி விட்டனர். எனினும், இந்த பாணி பஞ்சாயத்துக்கள் தான் தண்ணீர் தனியார்மயமாக்கலின் முதல் அடி என்பதால், இந்தத் திட்டத்திற்கு உயிரூட்ட ஒரிசா அரசு பல வழிகளிலும் முயன்று வருகிறது.''

''2002-ஆம் ஆண்டு ஒரிசா வறட்சியால் பாதிக்கப்பட்டதைப் பயன்படுத்திக் கொண்டு நீர் இறைப்பு பாசனக் கழகத்தை மூடிய ஒரிசா அரசு, விவசாயிகளைப் பாணி பஞ்சாயத்துக்களை உருவாக்கிக் கொள்ள கட்டாயப்படுத்தியது. நீர் இறைப்புப் பாசனக் கழகம் மூடப்பட்டதால், 5 இலட்சம் ஹெக்டேர் விளைநிலங்களைச் சொந்தமாகக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன விவசாயிகள், விவசாயத்தில் இருந்தே பிடுங்கி எறியப்பட்டனர்.''

''பாணி பஞ்சாயத்துக்களை உருவாக்காவிட்டால், விவசாயம், பாசனம், கிராமப்புற மேம்பாடு ஆகிய திட்டங்களுக்கு மைய அரசு தரும் நிதியுதவியை ஒரிசாவிற்குத் தராமல் நிறுத்தி விடுவோம் என மிரட்டினார், பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் அமைச்சராக இருந்த அர்ஜுன் ஷெட்டி.''

''இந்த மிரட்டல்கள் ஒருபுறமிருக்க, பாணி பஞ்சாயத்துக்கள், தங்களின் அலுவலகத்தைக் கட்டிக் கொள்ள மாநில அரசு 50,000 ரூபாய் நிதியுதவி அளிக்கும்; பாணி பஞ்சாயத்துக்களில் சேரும் விவசாயிகளுக்கு, நெல்லின் ஆதார விலை கூட்டித் தரப்படும்; ஒவ்வொரு பாணி பஞ்சாயத்துக்கும் ஒரு டிராக்டர் இலவசமாகத் தரப்படும்; பாணி பஞ்சாயத்துக்கள் உரக் கடைகளைத் திறந்து கொள்ள உதவி வழங்கப்படும் எனப் பலவிதமான சலுகைகள் வீசி எறியப்பட்டன. இதன் மூலம் ஒரிசாவில் 600 பாணி பஞ்சாயத்துக்கள் உருவாக்கப்பட்டன. இதுதான் ஒரிசாவில் பாணி பஞ்சாயத்துகள் உருவாக்கப்பட்ட கதை'' என ஒரிசாவின் அனுபவத்தை விவரித்த அவர், ''1998-இல் உலக வங்கியின் உதவியோடு இந்திய அரசு தயாரித்த இந்திய நீர்க் கொள்கை நாடெங்கிலும் அமலுக்கு வந்தால், தாமிரவருணி மட்டுமல்ல, கங்கை, காவிரி போன்ற ஜீவநதிகள், ஏரிகள், கண்மாய்கள் ஆகிய அனைத்து நீர்நிலைகளும் தனியார்மயமாகிவிடும்'' என எச்சரித்தார்.

''இந்த இந்திய நீர் கொள்கை, தண்ணீரை வாங்குவதற்கும் 'விற்பதற்கும்' அடமானம் வைப்பதற்கும், வாடகைக்கு விடுவதற்கும் ஏற்றபடியான பண்டமாக மாற்ற வேண்டும் என்கிறது. உலக வங்கியால் இந்த கொள்கை அமலாக்கப்பட்ட சிலி நாட்டில், இப்பொழுது அந்நாட்டின் 70 சதவீத நீர் ஆதாரங்கள் 4 தனியார் நிறுவனங்களுக்கும், ஒரு தனிநபருக்கும் சொந்தமாகி விட்ட அபாயத்தை உதாரணமாக'' எடுத்துக் கூறினார்.

''பாணி பஞ்சாயத்துக்களை உருவாக்குவது; பாசனத்துறையை இழுத்து மூடுவது; தண்ணீர் சேவை ஏஜென்சிகளை ஏற்படுத்துவது; தனியாரைப் பங்கெடுக்க வைப்பது; தண்ணீர் சந்தையை உருவாக்குவது — எனப் பச்சையாகவே தண்ணீரைத் தனியார்மயமாக்கும் இந்தத் திட்டத்தை இந்திய அரசு 'தண்ணீர்க் கொள்கை சீர்திருத்தம்' எனப் பூசி மெழுகுகிறது''


படிப்பகம்

www.padippakam.com

''நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பயன்படுத்துவது பற்றிக் கூறும் இக்கொள்கை, சென்னைக்கு வீராணம் ஏரியில் இருந்தும்; கிருஷ்ணாவில் இருந்தும் தண்ணீர் கொண்டு வருவதற்கு 200 கோடி ரூபாய் செலவாகிறது. இதற்குப் பதிலாக, சென்னைக்கு அடுத்துள்ள கிராமப்புறங்களில் உள்ள நீலத்தடி நீரை கொண்டு வந்தால், 20 கோடிதான் செலவாகும். இதற்கு, சென்னையைச் சுற்றியுள்ள கிராமப்புற விவசாயிகளை, நெற் பயிர் போட வேண்டாம் எனக் கட்டாயப்படுத்த வேண்டும் என ஆலோசனை கூறுகிறது.''




தண்ணீரைக் கொள்ளையடிக்கும் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை அம்பலப்படுத்தும் ம.க.இ.க.வின் நாடகம்.

''நகர்ப்புறக் குடிநீர் திட்டத்தைத் தனியார்மயமாக்க இக்கொள்கை முன்வைக்கும் ஆலோசனைகளுள் முக்கியமானவை 'நகராட்சி, மாநகராட்சிகளை அரசின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்து, தனியார் முதலாளித்துவ நிறுவனங்கள் போல மாற்ற வேண்டும்; அவற்றுக்கு, சர்வதேச நிதி நிறுவனங்களிடம் இருந்து நேரடியாகக் கடன் வாங்கிக் கொள்ளும் சுதந்திரம் தரப்பட வேண்டும்' என்பதாகும். ஒரிசாவில் நகர்ப்புற குடிநீர் வழங்குவது ''கார்ப்பரேட்'' நிறுவனங்கள் போல் மாற்றியமைக்கப்பட்ட பிறகு, கட்டணம் ஐந்து முறை உயர்த்தப்பட்டிருப்பதோடு, தற்பொழுது மாதாந்திர குடிநீர் கட்டணத்தை 2,000 ரூபாயாக உயர்த்த அரசு ஆலோசித்து வருகிறது'' என தண்ணீர் தனியார்மயமாவதின் அபாய விளைவைச் சுட்டிக் காட்டினார்.

''கிராமப்புற மக்களுக்குக் குடிநீர் வழங்குவதில் கூட, தேவையுள்ளவர்களுக்கு மட்டுமே குடிநீர் வழங்க வேண்டும் என்றும்; குடிநீர் திட்டங்களில் எவ்வளவு முதலீடு செய்யப்படுகிறதோ, அம்முதலீடு இலாபத்துடன் திரும்பக் கிடைக்கும்படி தண்ணீர் கட்டணங்கள் உயர்த்தப்பட வேண்டும் என்றும் ஆலோசனைகளை முன் வைக்கிறது, இக்கொள்கை.''

''தண்ணீர் கட்டணம் தாறுமாறாக உயர்த்தப்பட்டால், பணக்காரர்களும், கோக் போன்ற முதலாளித்துவ நிறுவனங்களும் தான் தண்ணீரை வாங்குவார்கள். எனவே, அவர்கள் 'தேவையுள்ளவர்கள்'; ஏழைகளால் வாங்க முடியாது; எனவே அவர்கள் தேவையற்றவர்கள்.''

''தண்ணீர் என்பது வாழ்வின் ஆதாரம்; ஏழைகளுக்குத் தண்ணீர் வழங்குவதை மறுப்பதன் மூலம், தண்ணீர் மீதான அவர்களின் உரிமையை மறுப்பதன் மூலம், அவர்கள் வாழ்வதற்கான உரிமையையே தட்டிப் பறிக்கிறது, இந்தக் கொள்கை''

''உலக வங்கியின் திட்டங்கள்தான் அரசின் சட்டங்களாக மாறுகின்றன. எனவே, அந்தத் திட்டங்களின் பின்னே மறைந்துள்ள சதி வலைப் பின்னலை மக்கள் முன் விரிவாக நாம் அம்பலப்படுத்த வேண்டும்'' எனச் சுட்டிக் காட்டிய அவர், ''இந்த மறுகாலனி ஆதிக்கத்துக்கு எதிராகப் போராட நாம் அனைத்துத் தரப்பு உழைக்கும் மக்களையும் அணிதிரட்ட வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார்.

## ''மனித சிந்தனையை நஞ்சாக்கும் 'கோக்' கலாச்சாரம்!''

### —தோழர் ஆனந்த் தெல்தும்ப்டெ, ஜனநாயக உரிமைகள் பாதுகாப்புக் குழு, மும்பை.

''நான் 2001-இல் நைஜீரியா நாட்டில் வேலை செய்து வந்தபொழுது, குழாயில் வரும் தண்ணீரை எடுத்து வாய் கொப்பளித்தேன். என்னுடன் வேலை செய்து வந்த அந்நாட்டைச் சேர்ந்த தொழிலாளி, இதைக் கண்டு பதறிப் போய், இந்தத் தண்ணீரெல்லாம் வாயிலேயே படக்கூடாது என எனக்கு அறிவுரை செய்தார். ஒரு ஏழை நாட்டைச் சேர்ந்த சாதாரண தொழிலாளி இப்படிச் சொல்லியது என்னை அதிர்ச்சியடைய வைத்தது. இப்படிப்பட்ட மாற்றங்கள் நம்மைச் சுற்றி நடந்து வருவதைப் பற்றி நாம் விழிப்புணர்வு கொள்ளாமல் இருக்கிறோம்'' எனப் புதிய தாராளவாதக் கொள்கை நமது கலாச்சாரத்தில் ஏற்படுத்தி வரும் மாற்றங்களைத் தனது உரையெங்கும் ஆழமாக விவரித்தார், தோழர் ஆனந்த் தெல்தும்ப்டெ.

''சுதந்திரச் சந்தை என்பது பொது மக்களைச் சுரண்டுவதில் எந்தளவிற்குச் செல்லக் கூடும் என்பதற்கு கோக் தான் மிகச் சிறந்த உதாரணம். ஏனென்றால், எதற்குமே பயனில்லாத ஒரு பானத்தை நமது தலையில் கட்டி, பல ஆயிரம் கோடி ரூபாய் இலாபமீட்டுகிறது கோக்.''

''நுகர்வு கலாச்சாரத்தில் மூழ்கித் திளைப்பதைவிட வாழ்க்கையில் வேறெந்த நோக்கமும் கிடையாது என்ற சிந்தனையை நம்முள் ஏற்படுத்தி விடுகிறது, இப்புதிய தாராளமய - ஏகாதிபத்திய கலாச்சாரம். இந்தக் கலாச்சாரம் நம்மிடம் எஞ்சியிருக்கும் கூட்டுத்துவ சிந்தனையைக் கொன்றுவிட்டு, தனிநபர்வாதத்தை ஊட்டி வார்க்கிறது; இத்தனிநபர்வாதத்தை வீரம் எனப் போற்ற வைக்கிறது. இதன் மூலம், கம்யூனிசம் தவறு; முதலாளித்துவம்தான் சரியானது என்று நம்மை ஒத்துக் கொள்ள வைக்கிறது. இதுமட்டுமின்றி, பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில், அமெரிக்கா ஆப்கான் மீதும், ஈராக் மீதும் குண்டு வீசி நாசப்படுத்துவதையும், அமெரிக்கா சில நாடுகளை போக்கிரி நாடுகள் எனக் குற்றஞ்சுமத்துவதையும், மறுப்பேதுமின்றி நம்மை ஏற்றுக் கொள்ள வைக்கிறது.''

''ஒருபுறம் இப்படி புதிய தாராளமய கலாச்சாரம் பொது

www.padippakam.com

மக்களின் சிந்தனையை நஞ்சாக்கினாலும், இன்னொருபுறம், இதற்கு எதிரான போராட்டங்களும் உலகு தழுவிய அளவில் நடந்து வருகின்றன. பிளாச்சிமடாவிலும், திருநெல்வேலியிலும் நடந்து வரும் போராட்டங்கள் உலகமயத்துக்கு எதிரான போராட்டங்கள்தான். அதனை கோக்கிற்கு எதிரான போராட்டமாக மட்டும் சுருக்கிப் பார்க்க முடியாது.''

''தண்ணீர் தனியார்மயம் என்பது நமக்குப் புதியதல்ல; ஒரு தலித்திற்கு உள்ளூர் குளத்தில் தண்ணீர் மறுக்கப்பட்டால், அது தனியார்மயமில்லையா? அம்பேத்கர் தண்ணீருக்காகப் போராட்டம் நடத்தினார் என்றால், அது மேல்சாதியினரின் தனியார்மயத்தை எதிர்த்த போராட்டம் இல்லையா? அது வழக்காக நடந்த போது, அந்த ஊர்க்குளம் எங்களது சொத்து என வாதாடித்தான் மேல்சாதிக்காரர்கள் வென்றார்கள்''

''திட்டக் கமிசன் துணைத் தலைவராக இருக்கும் மாண்டேக் சிங் அலுவாலியா போன்றவர்கள் தண்ணீரைத் தனியார்மயமாக்கினால், தண்ணீருக்கு உரிய விலை வைத்தால், தண்ணீர் வீணாவது தடுக்கப்படும் என்கிறார்கள். இது பதில் சொல்லவே தகுதியற்ற வாதம்.''

''தண்ணீருக்கு உரிய விலை வைத்தால் ஏழைகளால் தண்ணீரை வாங்க முடியாது. இதன் மூலம் தண்ணீர் பணக்காரர்களுக்குப் போய்ச் சேரும். கிராமப்புற தண்ணீர், நகர்ப்புறங்களைப் போய்ச் சேரும். உணவு தானிய பயிர்களுக்குப் பதிலாக ஏற்றுமதிக்குத் தேவைப்படும் பணப்பயிர்களைப் பயிரிடச் சொல்வதன் மூலம், தண்ணீர் மறைமுகமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.''

''மகாராஷ்டிராவில், நீர் ஆதார ஒழுங்கு முறைச் சட்டம் போட்டு, பாசனக் கட்டணத்தை ஒரு ஏக்கருக்கு ரூ. 8,000/- என உயர்த்தி விட்டார்கள். ஏற்கெனவே போண்டியாகிப் போய் நிற்கும் விவசாயிகளை, இக்கட்டண உயர்வு நிலத்தில் இருந்து துரத்தியடித்து விடும். வளமான நிலங்கள் பணக்காரர்களிடமும், தரகு முதலாளித்துவ நிறுவனங்களிடமும் குவிவதை இச்சட்டம் இனி துரிதப்படுத்தும்.''

''தில்லியில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு அரசாங்கம் 344 கோடி ரூபாய்தான் செலவழித்து வருகிறது. அதேசமயம், பொதுமக்களிடமிருந்து குடிநீர் கட்டணமாக 270 கோடி ரூபாய் வசூலித்து வந்தது. இதனால் ஏற்பட்ட 'நட்டம்' 70 கோடி ரூபாய்தான். இந்த நட்டத்தை ஈடுகட்ட டிசம்பர் 2004-இல் குடிநீர் வருவாய் 3,000 கோடி ரூபாயாக உயரும்படி, தண்ணீர் கட்டணம் 10 மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. தண்ணீருக்கு உரிய விலை வைப்பது என்பது இப்படிப்பட்ட பகற்கொள்ளையில்தான் முடிவடைகிறது.''

''மேலும், இத்தண்ணீர் தனியார்மயக் கொள்கை, உள்நாட்டில் தண்ணீருக்காக ஒரு போரை நடத்தும்படியான நிலைமையை உருவாக்குகிறது. ராசஸ்தானில், பாசன வசதி கோரிப் போராடிய விவசாயிகள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் ஐந்து விவசாயிகள் கொல்லப்பட்டனர்.''

''தண்ணீர் தனியார்மயத்தின் குறியீடான கோக்கிற்கு எதிராக பிளாச்சிமடாவில் நடக்கும் போராட்டம், இந்தியாவிற்கே வழிகாட்டியாக உள்ளது. ஆனால், இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக மும்பையிலும், தில்லியிலும் வாழும் மக்கள் கோக்கைக் குடிக்காமல், புறக்கணிப்பு செய்யாமல் இருக்கக் காரணம், புதிய தாராளவாத ஏகாதிபத்திய கலாச்சாரம் மக்களின் சிந்தனையில் தனிநபர் வாதம் என்ற நஞ்சைக் கலந்திருப்பதுதான்'' எனக் குற்றஞ்சாட்டிய ஆனந்த் தெல்தும்ப்டெ, ''திருநெல்வேலியில் ம.க.இ.க. நடத்தும் போராட்டம் கலங்கரை விளக்காகத் திகழட்டும்'' என வாழ்த்தினார்.

•••

# தண்ணீரை மட்டுமல்ல; உயிரையும் உறிஞ்சும் 'கோக்'!

**தா**மிரவருணி ஓடும் திருநெல்வேலி நகரத்தில் இருந்து சுமார் 20 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள கயத்தாறில் (ஆங்கிலேயர்களை எதிர்த்த வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கில் இடப்பட்ட ஊர்) 10 அல்லது 15 நாளைக்கு ஒருமுறைதான் குடிநீர் வழங்கப்படுகிறது. தாமிரவருணியை நம்பியிருக்கும் சீவலப்பேரி குடிநீர் திட்டத்தால் பயன் அடையும் சிவகாசி, அருப்புக்கோட்டை நகரங்களில் 15 நாளைக்கு ஒருமுறை குழாயில் தண்ணீர் வந்தாலே அதிர்ஷ்டம்தான்.

கோக் ஆலை அமையவுள்ள கங்கை கொண்டானுக்கு அருகே இருக்கும் ராஜபதி கிராமத்தில் 2,500 ஏக்கர் நிலம் பாசன வசதியின்றித் தரிசாகக் கிடக்கிறது. அக்கிராமத்து விவசாயிகள் ஆடு, மாடு மேய்த்து காலத்தை ஓட்டுகிறார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்திலேயே விவசாயம் செழிப்பாக நடக்கும் பகுதி என்று கூறப்படும் சிறீவைகுண்டம் வட்டாரத்தில் 14 ஆண்டுகள் கழித்து, இந்த ஆண்டில்தான் இரண்டு போகம் விளைந்திருக்கிறது - அதுவும் இயற்கையின் கருணையால்.

தாமிரவருணியை நம்பியிருக்கும் திருநெல்வேலி, விருதுநகர், சிவகாசி மாவட்ட மக்கள் இப்படி குடிநீருக்கும், பாசனத் தண்ணீருக்கும் அல்லாடி நிற்கும் வேளையில்தான், தாமிரவருணியை உறிஞ்ச கோக்கிற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

கோக், தாமிரவருணியில் இருந்து ஒரு நாளைக்கு எத்தனை இலட்சம் தண்ணீரை உறிஞ்சப் பேகிறது என்பது புதிராகவே இருக்கிறது. முதலில், தினமும் ஆறு இலட்சம் லிட்டர் தண்ணீர் தேவை என அனுமதி கேட்ட 'கோக்', இப்பொழுது தினமும் 12 லட்சம் தண்ணீர் தேவை எனக் கேட்கிறது. 3.7 லட்சம் லிட்டர் கோக் தயாரிக்க 5 இலட்சம் லிட்டர் தண்ணீர் போதும் எனக் கருதும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், 12 இலட்சம் தண்ணீர் தேவை என்ற கோக்கின் கோரிக்கையை நிராகரித்திருக்கிறது. ஆனாலும், தமிழக அரசின் ''சிப்காட்'' நிறுவனம் கோக்கிற்கு தினமும் 9 இலட்சம் லிட்டர் தண்ணீர் தர ஒப்புக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. *(ஆதாரம்: நக்கீரன், 10.09.05)*

கோக் ஆலை அமையவுள்ள கங்கைகொண்டான் பஞ்சாயத்து அடங்கியுள்ள மானூர் ஊராட்சி ஒன்றியத்தில், கோக் ஆலை இயக்கப்படுவதற்கான அனுமதி (Running Licence) தரக்கூடாது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கங்கை கொண்டான் பஞ்சாயத்திலும், அம்மன்ற உறுப்பினர்கள் 19.8.05 அன்று கொடுத்த விண்ணப்பத்தின் அடிப்படையில், ''கோக் ஆலைக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தை ரத்து செய்ய வேண்டும்'' என்ற தீர்மானம் 23.08.05 அன்று


படிப்பகம்

www.padippakam.com

நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தில் கையெழுத்துப் போட்ட கங்கை கொண்டான் கிராம 1-ஆவது வார்டு உறுப்பினர் கே.நடராஜன், "சிந்திக்க நேரம் கிடைக்காத காரணத்தால், வெளிநாட்டு குளிர்பான கம்பெனிக்கு எதிராகக் கையெழுத்திட்டதாக" 27.8.05 அன்று பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்கிறார். இடைப்பட்ட இந்த மூன்று நாட்களில், அவரைச் சிந்திக்கத் தூண்டியது எதுவாக இருக்கும்?



கோக்கினால் அநியாயமாகக் கொல்லப்பட்ட கம்சனின் மனைவி மற்றும் குழந்தைகள். உள்படம்: கம்சன்.

கங்கை கொண்டான் ஊராட்சி மன்றத் தலைவர் கம்சனோ, 23.8.05 அன்று காலையில் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு, அன்று மாலையே தனது நிலையை மாற்றிக் கொண்டார். "போலீசும், வேறு சிலரும் கொடுக்கும் நிர்பந்தம் காரணமாகத்தான் தனது நிலையை மாற்றிக் கொண்டதாக" அவர் வெளிப்படையாக பத்திரிகைகளுக்கும் பேட்டியளித்துள்ளார்.

"உம் மேல போலீசு போட்டிருக்குற கேஸுகளை வெச்சு உன்னை நெருக்குவோம். பஞ்சாயத்து கணக்கு வழக்குகளையும் நோண்ட வச்சு கம்பி எண்ண வச்சிருவோம்" என கம்சன், கோக்கிற்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு மிரட்டப்பட்டதாகக் கூறுகிறார், கம்சனின் மைத்துனர் பரமசிவன்.

இப்படிப்பட்ட நிலையில்தான் கம்சன் ஆகஸ்டு 29 அன்று எதிர்பாராதவிதமாகத் திடீரென்று மரணமடைந்தார். அவர் இறப்பதற்கு முன்பாக, தொடர்ந்து மூன்று நாட்கள் கம்சன் எங்கே இருக்கிறார்? எங்கே போனார்? என்ற விவரம் அவர் மனைவிக்குக் கூடத் தெரியவில்லை. "கம்சனை அவரது செல்போனில் நாங்கள் தொடர்ந்து தொடர்பு கொண்டால், 'ஹலோ' என்ற வார்த்தையைச் சொன்னதுமே, தொடர்பு துண்டிக்கப்பட்டதாகவும்; போலீசிடம் இதுபற்றி புகார் செய்யலாம் என முடிவெடுத்த பிறகுதான், அவர் மாயமாய் மறைந்தது போலவே, திடீரென வீட்டுக்குத் திரும்பினார்" என்றும் கம்சனின் நெருங்கிய உறவினர்கள் கூறுகிறார்கள். கம்சன் திரும்பி வந்த ஓரிரு நாட்களிலேயே திடீரென உடல்நிலை மோசமாகி இறந்து போகிறார்.

"கோக்கிற்கு ஆதரவாக கம்சன் மாறியதும் அவரைத் தொடர்பு கொண்ட கோக் பிளாண்ட் பொறுப்பாளர்கள் லட்சுமிபதியும், கண்ணனும் உங்களைக் குளிர்விக்க குற்றாலம் கே.ஆர்.ரெசிடென்சி ஹோட்டலில் சொகுசு ரூம் போட்டிருக்கிறோம். போய் என்ஜாய் பண்ணுங்கன்னு சொல்லி, குவாலிஸ் காரையும் கொடுத்தாங்க. நான், கம்சன், துணைத்தலைவர் பெருமாள் என 5 பேர் குற்றாலம் போனோம். 3 நாள் தங்கியிருந்து, பிராந்தியில 'கோக்'கை கலந்து ஏத்திக்கிட்டாரு. 3 நாள் கழிச்சி வீட்டுக்கு வந்ததும் துடிதுடிச்சு இறந்துட்டாரு" எனக் கூறியிருக்கிறார், கம்சனுடன் குற்றாலத்திற்குப் போன குஞ்சுமணி.

கம்சன் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டவர் என்பது ஊருக்குத் தெரியும்; கோக்குக்கும் தெரியும். அப்படிப்பட்ட நோயாளியை குற்றாலத்திற்குக் கூட்டிப் போய் சீமைச் சாராயத்தால் குளிப்பாட்டி, அவரை மரணத்திற்குள் தள்ளிவிட்டிருக்கிறது, கோக் நிர்வாகம்.

ஆனாலும், "கம்சன் மரணத்தில் மர்மம் இல்லை; அவர் மஞ்சள் காமாலை நோயினால் இறந்து போனதாக" திருநெல்வேலி மாவட்ட போலீசு கண்காணிப்பாளரே பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்து, கோக் மீது அப்பகுதி மக்கள் சந்தேகப்படுவதை ஒதுக்கித் தள்ளுகிறார்.

கதறக் கதற அரிவாளால் வெட்டிக் கொல்வது மட்டும் தான் கொலையா? நஞ்சு வைத்துச் சத்தமில்லாமல் கொல்லுவதும், மஞ்சள் காமாலை நோயாளியைச் சாராயத்தில் மூழ்கடித்துச் சாகடிப்பதும் கூடக் கொலைதான்.

தன்னுடைய பணபலத்துக்குப் பணியாதவர்களைப் படுகொலை செய்ய கோக் தயங்கியதேயில்லை. கொலம்பியா நாட்டில் கோக் ஆலையின் தொழிற்சங்கத் தலைவர்களையும், அவர்களது பிள்ளைகளையும் கூடக் கூலிப்படை வைத்துக் கொலை செய்திருக்கிறது கோக். கோக்கின் கொலைகளைப் பட்டியல் இடுவதற்கென்றே "கொலைகாரன் கோக்" என்றொரு இணையதளமே இருக்கிறது.

நியாயமாகப் பார்த்தால் கம்சனின் மரணம் குறித்து நீதி விசாரணைக்கு உத்தரவிட்டிருக்க வேண்டும். தமிழக அரசும், போலீசும் இதை செய்யவில்லை. மாறாக, "ம.க.இ.க.வினரால் தனது உடமைக்கும், தனது நிர்வாகிகளின் உயிருக்கும் ஆபத்து நேரிடலாம்" என கோக் கொடுத்த புகாரை வாங்கி வைத்துக் கொண்டதோடு, செப்.12 மறியலை காரணம் காட்டி, மாவட்ட போலீசு சட்டத்தின்படி, உங்கள் மீது ஏன் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கக் கூடாது?" எனப் போராட்டத் தலைமைக்கு நோட்டீசு அனுப்பியது, போலீசு.

தமிழக அரசும், போலீசும், கோக்கும் ஓரணியில் நிற்கும் போது, கம்சனின் குடும்பத்தினரோ, ஊர் மக்களோ கம்சனின் சாவுக்கு யாரிடம் நீதி கேட்க முடியும்?

கம்சனின் மரணம் நமக்கொரு எச்சரிக்கை. கொக்கோ கோலாவை அனுமதித்தால் கங்கை கொண்டானின் மண்ணும், தாமிரவருணி ஆறும்கூட மர்மமான முறையில் மரணமடையும். இந்தக் கணமே கோக்கை விரட்டியடிக்க வேண்டும் என்பதுதான் கம்சன் மரணம் நமக்கு அளிக்கும் பாடம்!

• அழகு

www.padippakam.com

தண்ணீரை வியாபாரமாக்காதே! தண்ணீரைத் தனியார்மயமாக்காதே!

# நெல்லையைக் குலுக்கிய 'கோக்' எதிர்ப்புப் போராட்டம்

செப்டம்பர் 12-ஆம் நாள்! மறு காலனியாக்கத்தின் கொடிய வெளிப்பாடான தண்ணீர் தனியார்மயத்திற்கு எதிராகவும், அதன் துலக்கமான சான்றான அமெரிக்க கோக்கிற்கு எதிராகவும் கடந்த மூன்று மாதங்களாக புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் மேற்கொண்ட பிரச்சார இயக்கத்தின் இறுதிக் கட்டமாக நெல்லையில் அமைந்த பேரணியும் மறியல் போராட்டமும், இம்மூன்று மாத இயக்கத்தின் வீச்சிற்கும் வீரியத்திற்கும் மிகப் பொருத்தமாக அமைந்தனவென்றால் மிகையல்ல.

ஆயிரக்கணக்கில் செங்கொடிகள் விண்ணில் உயர்ந்திருக்க, போராட அழைக்கும் நெடிய பதாகைகள் காற்றில் அசைய, அமெரிக்க ஏகாதிபத்திய கோக்கின் உருவ பொம்மையை நோக்கி உழைக்கும் வர்க்கத்தின் ஈட்டி முனை குறிவைத்து காத்திருக்க, பறை ஒலி முழங்க காலை 10 மணிக்கு தொடங்கியது ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகளின் பேரணி. பேரணிக்கு தோழர் முகுந்தன் தலைமை தாங்க தோழர் ஜெயகாந்த் சிங் பேரணியைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். மக்களை அச்சுறுத்தும் நோக்குடன் அதிரடிப்படை, நவீன ஆயுதம் தாங்கிய அதிரடிப்படை, அதிவேக அதிரடிப்படை, வஜ்ரா வாகனம், ஆண் போலீசு, பெண் போலீசு என எல்லா வகையான போலீசும் உயர் அதிகாரிகளின் தலைமையில் அணிவகுத்து நிறுத்தப்பட்டிருந்தனர். இந்த அச்சுறுத்தும் தோற்றத்தை கேலிக்குரியதாக மாற்றியபடி முன்னே சென்று கொண்டிருந்தது பறையொலி எழுப்பிய ம.க.இ.க. கலைக்குழு.

பயணம் செய்த களைப்பையும் பொருட்படுத்தாமல் ஒரு கையில் பையும் இன்னொரு கையில் கொடியுமாக, இடுப்பில் குழந்தையும், கையில் முழக்க அட்டையுமாக தளர்வின்றி முழக்கமிட்டு சென்ற பெண்களையும், உற்சாகமாக முன்வரிசையில் நின்ற சிறுவர்களையும் வியப்புடன் பார்த்தது நெல்லை நகரம். நெரிசலான போக்குவரத்துள்ள வீதிகள் வழியே மக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாமல் முன்னேறிச் சென்ற 3000 பேரைக் கொண்ட பேரணியைப் பார்த்து பொது மக்கள் பாராட்டினர். பல இடங்களில் வீட்டு வாசலில் நின்ற பெண்கள், முழக்கமிட்டு நாவறண்ட தோழர்களுக்கு தண்ணீர் கொடுத்தனர். இது 'எங்கள் முழக்கம்' என்பதை மக்கள் தம் செயலால் உணர்த்தினர்.

அச்சிடப்பட்ட முழக்க அட்டைகள், துணிப் பதாகைகள், ஓவியங்கள் அனைத்தையும் மக்கள் பேரார்வத்துடன் கவனித்தனர். வ.உ.சி. திடலில் தொடங்கிய பேரணி, ஜவகர் திடலில் குறித்த நேரத்தில் சென்றடைந்தது. தோழர் காளியப்பன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கங்கை கொண்டான் - மானூர் ஒன்றிய கவுன்சிலர் மணி, மதுரை உயர்நீதி மன்ற வழக்குரைஞர் வாஞ்சிநாதன், கர்நாடக மாநில பு.மா.இ.மு.வைச் சேர்ந்த கிராந்தி கோவிந்தன் ஆகியோர் எழுச்சி உரையாற்றினர். பயணக் களைப்பையும், நடந்து வந்த களைப்பையும் எள்ளளவும் பொருட்படுத்தாமல் சுமார் இரண்டு மணி நேரம் சுட்டெரிக்கும் வெயிலில் கால்கடுக்க நின்றபடியே முழக்கம் எழுப்பிய தோழர்களின் அர்ப்பணிப்பும், ஈடுபாடும் பாராட்டுக்குரியது. பேச்சாளர்களின் உரைகளுக்குப் பின் போராட்ட முழக்கத்தையே இசையாக்கி கலைக்குழுத் தோழர்கள் வழங்கிய போது, அத்தனை தோழர்களும் சேர்ந்து உணர்ச்சிகரமாக பாடினர்.

நெல்லை மக்களுக்கு பெரிய அளவில் அறிமுகம் இல்லாத இப்புரட்சிகர அமைப்புகள், இந்த நிகழ்ச்சிகள் மூலம் அவர்களுடைய மனதில் நீங்கா இடம் பெற்றுவிட்டன. பேரணி தொடங்கிய இடத்திலிருந்து ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடம் வரை ஒரு பத்திரிகையாளர் கூட அகலவில்லை. இதைத் தங்களுடைய நிகழ்ச்சியாகவே கருதி எந்தக் கோணங்களில் கொடிகள், பதாகைகள் இருந்தால் புகைப்படத்திற்கு பொருத்தமாக இருக்கும் என்று ஆலோசனை வழங்கினர். நூற்றுக்கணக்கில் திரண்டு வந்திருந்த பெண்களையும் குழந்தைகளையும் கண்டு நெகிழ்ந்தனர். தாமிரவருணித் தண்ணீருக்காக முதியவர்களும், தாய்மார்களும், குழந்தைகளும் நெல்லைக்கு வந்து போராடும் போது, நெல்லை மக்கள் இதில் முன்வந்து பங்களிக்கவில்லையே என ஆதங்கப்பட்டனர். கலைக்குழு பெண் தோழர்களை பேட்டி எடுத்தனர். சாதாரணமாகத் தோற்றமளித்த பெண்கள் அளித்த பதில்களை கண்டு வியந்தனர்.

அரசியல் கட்சிக் கூட்டங்களில் அராஜகத்தையும், கட்டுப்பாடின்மையையும், கூலிக்கு மாரடிக்கும் உணர்வற்ற தன்மையையும், பொறுக்கிக் கலாச்சாரத்தையும் மட்டுமே பார்த்துப் பார்த்துப் பழகியிருக்கும் மக்களுக்கும் செய்தியாளர்களுக்கும் இப்புரட்சிகர அமைப்புகளின் - தோழர்களின் கட்டுப்பாடும், வெளிப்படுத்திய இயல்பான புரட்சிகர உணர்வும் அரசியல் முழக்கங்களும் அதிசயமானதாக இருந்தன. தீவிரவாதிகள் என்றும், ஆபத்தானவர்கள் என்றும் ஊடகங்கள் மூலம் நிகழ்த்திய பொய்ப்பிரச்சாரமும், அதற்காகவே கொண்டு வந்து இறக்கப்பட்ட படைகள் ஏற்படுத்த விரும்பிய பீதியும் மூன்று மணி நேரத்தில் நொறுங்கிச் சரிந்தன.

தாகம் தீர்க்கும் தண்ணீரை லாபம் பார்க்கும் சரக்காகவும், விடுதலையின் வண்ணமான சிவப்பை சுரண்டலின் நிறமாகவும் மாற்ற முனையும் அமெரிக்க கோக்கை எதிர்த்து, உழைக்கும் வர்க்கத்தின் உதிரத்தில் தோய்ந்த செங்கொடி, நெல்லை நகரெங்கும் சுழன்று வீசியது. நெல்லையே சிவந்தது. 'தாமிரவருணியை உறிஞ்ச வரும் அமெரிக்க கோக்கை அடித்து விரட்டுவோம்' என்ற முழக்கம், நினைவில் அகலாது ஓர் இசையைப்போல நெல்லை மக்களின் நெஞ்சங்களில் பதிந்தது.

ஆர்ப்பாட்டம் முடிந்து இப்புரட்சிகர அமைப்புகளின் தோழர்கள் ஏறத்தாழ 1200 பேர் மறியலுக்கா்கப் புறப்பட்டனர். மறியல் நடைபெறவிருந்த கங்கை கொண்டானில் சிப்காட் வளா

கத்தைச் சுற்றிலும் இராணுவம்தான் பாக்கி என்று கூறுமளவிற்கு எல்லா வண்ணப் 'படைகளும்' குவிக்கப்பட்டிருந்தன. கங்கை கொண்டான் கிராமத்துக்குச் செல்லும் மூன்று சாலைகளும் காலை முதலே அடைக்கப்பட்டு விட்டன. வங்கிகள், பள்ளிகளுக்கு அரைநாள் விடுமுறை விடப்பட்டது. இத்தனை 'ஏற்பாடு'களுக்குமிடையில் தொடங்கியது மறியல் போராட்டம். ஆவேசமாக முழக்கமிட்டு முன்னேறி வந்த தோழர்கள், ஒரு போரை நடத்தாமல் நெடுஞ்சாலையைத் தொட முடியாது என்ற அளவிற்கு போலீசு தடையரண் அமைத்திருந்தது.




எக்காரணம் கொண்டும் அமெரிக்க மூலதனத்தின் மீது புரட்சிகர அமைப்புகளின் நிழல் கூடப் பட்டுவிடக் கூடாது என்ற அச்சம்தான் போலீசின் படை பலம் மற்றும் இத்தகைய 'ஏற்பாடு'களுக்குக் காரணமாக இருந்தது. தடையை மீறி மறியல் செய்ய முற்பட்ட தோழர்கள் அனைவரையும் - கைக்குழந்தைகள், சிறுவர் சிறுமிகளோடு கைது செய்த போலீசு, பின்னர் இரவு 10 மணியளவில் விடுதலை செய்தது.




தாமிரவருணியை உறிஞ்சவரும் கோக் ஆலையை எதிர்த்து
நெல்லை நகரில் நடந்த ஆர்ப்பாட்டப் பேரணி.

''வெளிநாட்டு குளிர்பான கம்பெனிக்கு எதிர்ப்பு - திணறியது நெல்லை'' என்று விளம்பரச் சுவரொட்டிகளில் மறியல் போராட்டத்தின் படத்துடன் செய்தி வெளியிட்டது தினமலர். தினமணி, தினகரன், தினத்தந்தி - என எல்லா நாளேடுகளின் நெல்லைப் பதிப்புகளும் போராட்டப் படங்களால் சிவப்பு வண்ணத்தில் நிரம்பியிருந்தன.

போராட்டத்திற்குமுன் தோழர்களில் ஒரு குழுவினர் இரண்டு நாட்கள் திருவனந்தபுரத்தில் பிரச்சாரம் செய்தனர். மலையாளம் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட துண்டறிக்கைகள் மற்றும் மலையாளத்தில் மொழியாக்கம் செய்யப்பட்ட பிளக்ஸ் கேலிச் சித்திரங்கள் ஆகியவற்றுடன் அங்கே இரண்டு நாட்கள் நடைபெற்ற பிரச்சாரம் பல்வேறு மலையாள நாளிதழ்களில் வெளியாகி உள்ளது. நெல்லை போராட்டம் குறித்த செய்திகளையும் இந்நாளேடுகள் வெளியிட்டுள்ளன. ஏற்கெனவே பிளாச்சிமடா போராட்டத்தினூடாக கோக் எதிர்ப்பு உணர்வு பெற்றிருக்கும் கேரளத்து மக்களிடம் இப்போராட்டம் வரவேற்பு பெற்றுள்ளது.

•••

பேரணி, ஆர்ப்பாட்டம் குறித்து இப்புரட்சிகர அமைப்புகள் முன்னதாகவே விண்ணப்பித்திருந்த போதிலும் போலீசு அதற்கு அனுமதி அளிக்கவில்லை. தமிழகம் முழுவதும் நடைபெற்ற இப்பிரச்சாரம் கோக்கின் ஏஜெண்டாக செயல்பட்ட நெல்லை சரக டி.ஐ.ஜி.யால் இம்மூன்று மாவட்டப் பகுதிகளில் பெரிதும் முடக்கப்பட்டது. இதை எதிர்த்த போராட்டத்தின் ஊடாகத்தான் இப்பகுதிகளில் பிரச்சாரத்தைக் கொண்டுச் சென்றன இவ்வமைப்புகள். ஆகஸ்டு 20 முதல் 'நக்சலைட்டுகள், தீவிரவாதிகள் ஊடுருவல்' என்கிற பிரச்சாரத்தை கிளப்பிவிட்டு மக்களை பீதியூட்ட முயற்சித்தது உளவுத்துறை. 'சுவர் எழுத்துக்காக பொய் வழக்குகள், தடுப்புக் காவல் கைது குறித்த அச்சுறுத்தல்கள், கண்காணிப்புகள்' - இவையனைத்தும் போராட்ட நாள் நெருங்க நெருங்க போலீசால் தீவிரப் படுத்தப்பட்டன.

அதே நேரத்தில் 'கங்கை கொண்டான் கோக் ஆலையின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும், தண்ணீர் தனியார்மயத்தை தடுக்க வேண்டும்' என்ற கோரிக்கைகளுடன் ஆயிரம் வழக்குரைஞர் தனித்தனியே கையொப்பமிட்டு வழங்கிய மனு, ஊடகங்களில் விரிவாக இடம்பெற்றது. கம்சனின் மரணம் குறித்து நீதி விசாரணை கோரி மனித உரிமைப் பாதுகாப்பு மையம் அளித்த அறிக்கையும், நெல்லை நகரில் விரிவாக விநியோகித்த புரட்சிகர அமைப்புகளின் பிரசுரங்களும் சுவரொட்டியும் எதிரிகளிடம் அச்சத்தை தோற்றுவித்தன. 'ம.க.இ.க.வினரால் தமது உயிருக்கு ஆபத்து' என்று கோக் ஆலை நிர்வாகிகள் மாவட்ட எஸ்.பி.யிடம் புகார் கொடுத்திருக்கின்றனர்.

கம்சன் மரணம் குறித்த புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம் மக்களிடையே ஏற்படுத்திய தாக்கத்தின்

www.padippakam.com

விளைவு உடனே தெரிந்தது 'இயற்கை மரணம்' என்று போலீசு கூறியபோதும், அரசு இப்போது ஆர்.டி.ஓ. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. அதேபோல 'கோக் ஆலைக்கு எதிர்ப்பு பெருகி வருவதால் 'ஆதரவு - எதிர்ப்பு பிரிவினரிடம் கருத்துக் கேட்பதற்காக' டி.ஆர்.ஓ. விசாரணைக்கும் அரசு ஆணையிட்டுள்ளது. ம.க.இ.க. உள்ளிட்ட அனைவரிடமும் கருத்து கேட்போம் என டி.ஆர்.ஓ. செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். இவையெல்லாம் கண் துடைப்பு வேலைதான் எனினும் இவற்றைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை புரட்சிகர அமைப்புகளின் பணிகள் உருவாக்கியுள்ளன.





கங்கை கொண்டானில் நடந்த மறியலில் பங்கெடுத்துக் கொண்ட தோழர்கள் மற்றும் குழந்தைகள்.

•••

அமெரிக்க 'கோக்'கிற்கு எதிராகவும், தண்ணீர் தனியார்மயத்துக்கு எதிராகவும் நடந்த இம்மிகப்பெரிய போராட்டம், நெல்லை மக்கள் மத்தியில், குறிப்பாக கங்கை கொண்டான் வட்டார மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இப்போராட்டத்தைத் தொடர்ந்து கோக் ஆலைக்கு அருகில் உள்ள ராஜபதி எனும் கிராமத்து மக்கள் ஒருநாள் கடையடைப்பும் உண்ணாவிரதமும் நடத்தியுள்ளனர்.

கிராமமே திரண்டு பங்கேற்ற இந்த உண்ணாவிரதத்தில் சுமார் 1000 மக்கள் கலந்து கொண்டிருக்கின்றனர். இதனைத் தொடர்ந்து மற்ற சுற்றுவட்டாரக் கிராமங்களிலும் இத்தகைய போராட்டங்களை நடத்த மக்கள் விரும்புகின்றனர். கோக் ஆலையைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற உணர்வு மக்களிடையே பற்றிப் படர்ந்து வருகிறது.

நெல்லையில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில் கோக் அடிவருடியான தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கருப்பையாவுக்கு கலைஞர் விருது வழங்கப்படுவதை அம்பலப்படுத்தி நகரெங்கும் புரட்சிகர அமைப்புகள் சுவரொட்டி ஒட்டியிருந்தன. ''கோக் ஆலை குறித்து தி.மு.க.வின் நிலை என்ன?'' என்று பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்காமல் தவிர்த்திருக்கிறார் கருணாநிதி.

பெயரளவிற்கு மட்டுமே எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருந்த 'மார்க்சிஸ்டுகள்' புரட்சிகர அமைப்புகளின் போராட்டத்தைத் தொடர்ந்து, கங்கை கொண்டானில் மறியல் நடத்தியுள்ளனர். ''வங்காளத்தில் கோக் - பெப்சி ஆலைகள் நான்கு இருக்கும் போது இங்கே மறியல் செய்வது என்ன நியாயம் - கங்கை கொண்டான் மக்கள்'' என்று சுவரொட்டி அடித்து ஒட்டி 'மார்க்சிஸ்டு'களை ஏளனம் செய்திருக்கிறது கோக் நிர்வாகம். செப்.12 போராட்டத்தைத் தொடர்ந்து, 'சைக்கிள் பேரணி' அறிவித்திருக்கிறார் புதிய தமிழகம் கிருஷ்ணசாமி. இந்தப் பிரச்சினை மீது கருத்து கூற வேண்டிய நிர்ப்பந்தத்தையும், ஏதேனும் செய்தாக வேண்டிய கட்டாயத்தையும் இப்போராட்டம் ஏற்படுத்தி வருகிறது.

போராட்டம் முடிந்து விட்ட போதிலும், கோக்கிற்கு எதிரான புரட்சிகர அமைப்புகளின் வேலைகள் தொடர்கின்றன. கம்சன் மரணத்தை 'இயற்கை மரணம்' என்று கூறி அமுக்கப் பார்க்கின்றன அரசும் ஆலை நிர்வாகமும்.

இதனை அம்பலப்படுத்தும் விதத்தில் மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் சார்பில் ஒரு உண்மை அறியும் குழு, கம்சன் குடும்பத்தினர் உள்ளிட்ட பலரிடமும் விவரங்கள் திரட்டியுள்ளது. இவற்றை ஒரு அறிக்கையாக வெளியிடுவதுடன், இம்மரணம் குறித்து விசாரிக்க, குற்ற வழக்கொன்றைப் பதிவு செய்யவேண்டும் என நீதிமன்றத்தில் வழக்கும் தொடரவுள்ளது. இதுவன்றி, கோக் ஆலைக்கு வழங்கப்பட்டுள்ள உரிமத்தை ரத்து செய்யக் கோரி பொதுநல வழக்கொன்றைத் தொடர்வதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அக்டோபரில் உற்பத்தியைத் தொடங்குவோமெனத் திமிராக அறிவித்திருக்கிறது கோக் நிர்வாகம். ஆலையின் கட்டுமானப் பணி முடியும் தறுவாயில் உள்ளது. மக்களின் போராட்டமோ கட்டியமைக்கப்படக் காத்து நிற்கிறது. ஒரு மிகப் பெரிய ஆலையை ஆறே மாதங்களில் கட்டி முடித்துத் தன் பணபலத்தையும் அதிகார பலத்தையும் காட்டியிருக்கிறது இந்த அமெரிக்க ஏகாதிபத்திய நிறுவனம். அதற்கெதிராக மக்கள் பலத்தைத் திரட்டி நிறுத்திக் காட்டவேண்டியது தமிழக மக்களின் போராட்டக் கடமை. நமது கடமை.

**- பு.ஜ. செய்தியாளர்கள்**

7-ஆம் பக்கத் தொடர்ச்சி

மோட்டார் சைக்கிள்களில் 20-க்கும் மேற்பட்ட ரவுடிகளுடன் வந்த ஜோதிராமலிங்கமும் சூரியமூர்த்தியும் தோழர்கள் சென்ற காரை வழி மறித்தனர். அரிவாள், இரும்புக்கம்பி, இரும்புக்குழாய், உருட்டுக் கட்டைகளுடன் சூழ்ந்த அக்கும்பல் வாடகைக் காரை அடித்து நொறுக்கியதோடு, தோழர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டு கொலைவெறியோடு தாக்கியது. இதில் பழனிச்சாமி, செந்தில்குமார் ஆகிய இரு தோழர்களுக்கு கை எலும்பு முறிந்தது. செந்தில்குமாருக்கு தலையில் ஏழு இடங்களில் அரிவாள் வெட்டுக் காயம். தோழர்கள் புஷ்பராஜ், சசி, கோவிந்தசாமி ஆகிய மூவருக்கும் உடலெங்கும் உள்காயங்கள், அரிவாள் கீறல்கள். இந்த அளவுக்குத் தாக்கிய பின்னரும் வெறி அடங்காத இக்கொலைகார கும்பல், தோழர்கள் மருத்துவமனை சென்று விடாதிருக்க, அவர்களைக் காரில் தூக்கிப் போட்டு சிவகிரிக்குக் கொண்டு சென்றது.


தோழர் பழனிச்சாமி

இக்கொலைவெறித் தாக்குதல் திட்டத்தினைப் பற்றி முன்பே அறிந்திருந்த போலீசு, நிலைமை கைமீறிப் போய்விடாதிருக்க, எதிரே வேனில் வந்து தோழர்களைக் கைப்பற்றி தமது வாகனத்தில் ஏற்றிக் கொண்டது. தோழர்களை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லாமல், சிவகிரி போலீசு நிலையத்திலேயே வாகனத்தை நிறுத்திப் போட்டது. தோழர்கள், கடுமையாக எச்சரித்த பிறகே, வாகனத்தைக் கிளப்பி அதிகாலை 2.30 மணியளவில் ஈரோடு மருத்துவமனையில் சேர்த்தது.

இதற்கிடையில் தலையில் வெட்டுப் பட்டு, கை எலும்பு முறிந்து, மயங்கி விழுந்து இருட்டில் தனியாகக் கிடந்துள்ளார் தோழர் செந்தில்குமார். இவரை இறந்துவிட்டதாகக் கருதி, காரில் ஏற்றாமல் தாக்குதல் நடந்த இடத்திலேயே இருட்டில் போட்டு விட்டுச் சென்றுள்ளது இந்தக் கொலைகாரக் கும்பல். சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்து தட்டுத்தடுமாறிச் சென்று தொலைபேசி மூலம் தனது வீட்டிற்குத் தகவல் தெரிவித்துள்ளார், அவர். அதன்பிறகு வந்த போலீசார் தோழரை வாகனத்தில் ஏற்றி அதிகாலை 3 மணியளவில் மருத்துவமனையில் சேர்த்தனர்.

இவ்வளவுக்குப் பின்னரும் தோழர்களிடம் வாக்குமூலம் பெறவோ, எதிரிகள் மீது வழக்குப் பதிவு செய்து கைது செய்யவோ போலீசு முயற்சிக்கவில்லை. தோழர்களும் வழக்குரைஞர்களும் மேல்மட்ட - கீழ்மட்ட போலீசு அதிகாரிகளைத் தொடர்ந்து வலியுறுத்திய பின்னரே, இக்கிரிமினல் - கொலைகார கும்பல் மீது சாதாரண பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து போலீசார் கணக்கு காட்டினர். ஊருக்குள் போலீசு கண்முவனாலேயே திரியும் ஜோதிராமலிங்கம், சூரியமூர்த்தி ஆகியோர் உள்ளிட்ட இக்கும்பலைக் கைது செய்யாமல், தேடிக் கொண்டிருப்பதாகப் போலீசார் பசப்புகின்றனர். முக்கியத்துவமற்ற 5 பேரைக் கைது செய்து உடனே பிணையில் விடுவித்து விட்டனர்.

ஆனால், கொலைவெறித் தாக்குதலுக்குள்ளாகி, தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த தோழர்கள் மீது மூன்று பொய் வழக்குகள் போலீசாரால் சோடிக்கப்பட்டன. அமைச்சர் இராமசாமி நேரடியாகவே ஈரோடு அரசு மருத்துவமனையின் இணை இயக்குனரான நாகராஜனிடம் வலியுறுத்தி உள்நோயாளிகளாகச் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் தோழர்களைக் கட்டாயமாக ''டிஸ்சார்ஜ்'' செய்ய வைத்துள்ளார்.

உடனே, சோடிக்கப்பட்ட பொய் வழக்குகளின் அடிப்படையில், மருத்துவமனையிலிருந்து நள்ளிரவில் தோழர்களைக் கொண்டு சென்று சேலம் மத்திய சிறையில் அடைத்துள்ளது, கிரிமினல்களின் ஏவல்படையான போலீசு. இப்பிரச்சினையை ஒட்டி நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரிகளான கொடுமுடி போலீசு ஆய்வாளர் முத்தழகன், பெருந்துறை போலீசு கண்காணிப்பாளர் சின்னப்பன் ஆகிய இருவரும் வெளிப்படையாகவே ஜோதிராமலிங்கம் - சூரியமூர்த்தி கும்பலுக்கு ஆதரவாகப் பேசியும் செயல்பட்டும் வருகின்றனர்.

கொலைகார - கிரிமினல் குற்றவாளிகளைக் கைது செய்ய வலியுறுத்தியும் போலீசின் நடவடிக்கைகளைக் கண்டித்தும் பு.மா.இ.மு. சார்பாக தொடர்ந்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. இதே கோரிக்கையை வலியுறுத்தி, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், ஆதித் தமிழர் பேரவை ஆகிய அமைப்புகளும் சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்டன. போலீசாரோ, ஜோதிராமலிங்கம் - சூரியமூர்த்தி கும்பலைத் தூண்டிவிட்டு ''வன்முறையை தூண்டும் புரட்சிகர அமைப்புகளைத் தடை செய்!'' என சுவரொட்டி ஒட்டச் செய்தது. பு.மா.இ.மு.; த.ஒ.வி.இ.; ஆ.த.பே ஆகிய அமைப்புகள் கூட்டாக 21.9.05 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கோரியபோது, முதலில் அனுமதிப்பதாகக் கூறிய போலீசு, கடைசி நேரத்தில் ஆர்ப்பாட்டத்துக்குத் தடை விதித்தது.

ஓட்டுப் பொறுக்கிகள், சாதிவெறியர்கள், கிரிமினல்கள், போலீசு ஆகியவற்றின் கூட்டணி ஆட்சிக்கும், மக்கள் மீது அனைத்துவகை சுரண்டல் - ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கும் இன்னுமொரு இரத்த சாட்சியம்தான் பு.மா.இ.மு. தோழர்கள் மீதான இக்கொலைவெறித் தாக்குதல்! ''இக்கிரிமினல் கும்பலின் கோழைத்தனமான தாக்குதலுக்கு அஞ்சமாட்டோம்! இவர்களின் அயோக்கியத்தனங்களையும் ஆதிக்கத் திமிரையும் எதிர்த்துத் தொடர்ந்து போராடுவோம்!'' என்று சிவகிரி - ஈரோடு பு.மா.இ.மு. தோழர்கள் துண்டறிக்கை வெளியிட்டு தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றனர். தமிழகமெங்கும் அமைச்சர் இராமசாமி மற்றும் அவரது எடுபிடி கிரிமினல் கும்பலை அம்பலப்படுத்தி புரட்சிகர அமைப்புகள் சுவரொட்டி பிரச்சாரம் மேற்கொண்டுள்ளன.

போலீசும் அதிகார வர்க்கமும் இக்கிரிமினல் கும்பலைப் பாதுகாத்தாலும், மக்களின் வெஞ்சினத்திலிருந்த இக்கும்பல் ஒருக்காலும் தப்பிவிட முடியாது என்பது திண்ணம்.

**- புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, சிவகிரி-ஈரோடு.**

www.padippakam.com

# கூலிக்கு மாரடிப்பதுதான் தன்னார்வத் தொண்டா?

"மக்கள் கண்காணிப்பகம்: அமெரிக்க சாத்தானின் கள்ளக் குழந்தை" என்ற தலைப்பில் ஜூலை 2005 புதிய ஜனநாயகம் இதழில் அம்பலப்படுத்தும் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தோம். அதற்கு மறுப்புரை எழுதி அனுப்பியிருக்கும் மக்கள் கண்காணிப்பகம் அதைச் சுற்றுக்கு விட்டிருப்பதாக அறிகிறோம்.

மிகவும் புத்திசாலித்தனமாக எழுதுவதாகக் கருதிக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அளித்துள்ள மறுப்புரை, உண்மையில், அதன் ஏவலர்களால் இடப்பட்டிருக்கும் பணியாகிய அடுத்துக் கெடுக்கும் நயவஞ்சக நரித்தனத்தையே வெளிப்படுத்தியிருக்கிறது.

புதிய ஜனநாயகத்தின் மீது மக்கள் கண்காணிப்பகத்திற்கு எந்தப் பகையும் இல்லை என்றும் இதைப் பல ஆண்டுகளாக விரும்பிப் படிக்கும் அதன் உறுப்பினர்கள் இப்பத்திரிகை முன்வைக்கும் வாதங்களையும் கருத்தியல்களையும் வேதம்போல நம்பியதாகவும், இப்போது அந்த நம்பிக்கை தகர்ந்து போய்விட்டதாகவும் மக்கள் கண்காணிப்பகம் தனது மறுப்புரையில் எழுதியுள்ளது.

"மக்கள் கண்காணிப்பகத்தைத் தாக்கிய பின்புதான் நம்பிக்கை தகர்ந்ததாகப் பொருள் கொள்ள வேண்டாம். ஆனால், புதிய ஜனநாயகம் சரியான தகவல்களை இதுவரை தந்து கொண்டிருப்பதாக நம்பி வந்தோர்க்கு சீ இவ்வளவுதானா? என்று கேட்கும் அளவுக்கு நம்பிக்கை தகர்ந்து விட்டது. யாரோ ஒருவர், ஏதோ சுயநலத்தில் தந்த கருத்துக்களை, அல்லது எழுதிய கட்டுரையை உண்மையா, பொய்யா என்று விசாரிக்காமல். பிரசுரித்த புதிய ஜனநாயகத்தின் நம்பகத்தன்மை தாழ்ந்து போய்விட்டதை எண்ணி, இதுவரை இந்தப் பத்திரிகை இப்படித்தான் பொய்களை அள்ளி வீசியிருக்குமோ, இப்பொய்களை இதுகாறும் நம்பியுள்ளோமோ என்று எண்ணும் போது வெட்கப்படுவதைத் தவிர வேறு வழியில்லாது போய்விட்டது" என்கிறது, மறுப்புரை.

இந்தச் சொற்களும், சொற்றொடர்களும், அவற்றில் உள்ள சுயமுரண்பாடுமே, ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் கழுத்துப்பட்டை கட்டிய நிர்வாகிகளும், விளம்பர முகவர்களும் கலந்துரையாடி எழுதியனவென்று காட்டுகின்றன. முதலில் அந்த அமைப்பைத் "தாக்கிய பின்புதான், புதிய ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை தகர்ந்ததாகப் பொருள் கொள்ள வேண்டாம்" என்று தொடங்குகிறது. தொடர்ந்து, அந்த அமைப்பு குறித்த கருத்துக்களை "உண்மையா, பொய்யா என்று விசாரிக்காமல் பிரசுரித்ததால் புதிய ஜனநாயகத்தின் நம்பகத்தன்மை தாழ்ந்து போய்விட்டதாக"க் கூறுகிறது.

தமது அமைப்பின் உள்விவகாரங்களை புதிய ஜனநாயகம் ஏட்டிற்குக் கொடுத்தவர் யார் என்ற கேள்விதான் தற்போது அவர்களை உலுக்கிக் கொண்டிருக்கிறது. அதற்கான தேடுதல் வேட்டையும், சந்தேகப்படும் சக ஊழியர்களையே பழிவாங்குவதும்தான் அவர்களின் ஒரே வேலையாகவும் உள்ளது. இதை மக்கள் கண்காணிப்பகத்தின் மறுப்புரையே ஒப்புக் கொண்டிருக்கிறது. "புதிய ஜனநாயகம் கட்டுரையில் கூறியுள்ளபடி, உலகமயமாக்கலை ஆதரிக்க வேண்டும் என்ற நோக்கில் நடத்தப்பட்ட கருத்தரங்கு பற்றி ஹென்றி டிபேனிடம் கேட்ட போது, அவர் சொன்னதாக எழுதியுள்ள செய்தி ஒன்றே போதும், புதிய ஜனநாயகத்தின் தரத்தை நிர்ணயிக்க. **ஹென்றியைச் சந்தித்தது யார்? எப்போது சந்தித்தார்? எந்த இடத்தில் சந்தித்தார்?** என்று புதிய ஜனநாயகத்தால் சொல்ல முடியுமா? சாதாரண மஞ்சள் பத்திரிகை அளவுக்கு புதிய ஜனநாயகம் தரம் தாழ்ந்து போக வேண்டுமா? நடந்ததாகச் சொல்லப்பட்ட கருத்தரங்கு பற்றி மக்கள் கண்காணிப்பக அலுவலகத்தில் திரு. ஹென்றி டிபேனைச் சந்தித்துக் கேட்டிருந்தால் அவரே பதில் சொல்லியிருப்பாரே. அவரை நேரடியாகச் சந்தித்துப் பேசத் திராணியற்ற ஒருவர் எவ்வித ஆதாரமுமின்றி யாரோ ஒருவர் தந்த செய்தியை புதிய ஜனநாயகம் வெளியிட்டுத் தன்னை அசிங்கப்படுத்திக் கொண்ட போக்கு கேவலமானது; அநாகரிகமானது. (அழுத்தம் மக்கள் கண்காணிப்பகம்.)

மனித உரிமை, ஜனநாயகம் பற்றியெல்லாம் பெரும் கூச்சல், வெறுங் கூச்சல் போடும், மக்கள் தன்காணிப்பகத்திற்கு செய்திகளுக்கான மூலாதாரங்களை வெளியிடாமல் இருக்கும் உரிமை பற்றி தெரியாதா? தெரிந்தும் "ஹென்றியைச் சந்தித்தது யார்? எப்போது சந்தித்தார்? எந்த இடத்தில் சந்தித்தார்?" என்று அழுத்தமாகவும் "புதிய ஜனநாயகத்தால் சொல்ல முடியுமா?" என்று சவாலாகவும் சவடாலாகவும் கேள்விகள் எழுப்புவதிலிருந்தே அவர்களின் படபடப்பும் பரபரப்பும் தெரிகிறது.

அடுத்து, புதிய ஜனநாயகம், புலனாய்வுப் பத்திரிக்கை என்று சொல்லிக் கொண்டு நடத்தப்படும் "கிசுகிசு" ஏடுகளைப் போன்றவை அல்ல; அவைதான் லஞ்ச ஊழல், முறைகேடுகள், சமூக விரோதச் செயல்களைக் கிசுகிசுப் பாணியில் எழுதிவிட்டு, சம்பந்தப்பட்ட பிரச்சினைக்குக் காரணமானவர்களிடமும் விளக்கம் கேட்டு எழுதி ஈடுகட்டும் - சமரசம் செய்து கொள்ளும் இதழியல் தர்மம் பேணுபவை. அதுபோல புதிய ஜனநாயகம் ஏட்டையும் கருதி மக்கள் கண்காணிப்பகம் 'திராணியிருக்கிறதா? சொல்ல முடியுமா?' என்று கேட்டு சவால் விடுகிறது. அவர்களை நேரில் சந்தித்து விளக்கம் கேட்காமல் எழுதியதாலேயே புதிய ஜனநாயகத்தில் எழுதப்பட்ட கருத்துக்கள் ஆதாரமற்றவை, பொய்யானவை என்று கூறி ஒதுக்கிவிட எத்தனிக்கிறார்கள்.

புதிய ஜனநாயகத்துக்குக் கிடைக்கும் தகவல்களின் மூலாதாரம், அதன் மீது பு.ஜ. வைக்கும் நம்பகம்தான் தீர்மானிக்கக் கூடியதே தவிர, அவற்றால் பாதிக்கப்படுபவர் தரும் விளக்கங்கள் அல்ல. மேலும் புதிய ஜனநாயகம் "நடுநிலை ஏடு, இதழியல் தர்மம்" என்ற முதலாளியக் கோட்பாடுகளுக்குள் அடங்குவதுமில்லை.

மக்கள் கண்காணிப்பகம் மறுப்புரை என்பதாகக் கருதிக் கொண்டுள்ள தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியிருப்பதைப் போன்று "ஜனநாயகம்; ஜனநாயகம் தரும் சட்டத்தின் ஆட்சி; சட்டத்தின் ஆட்சியை நீதியோடு காப்பாற்ற வேண்டிய நீதித்துறையும்


படிப்பகம்

www.padippakam.com

காவல்துறையும்'' என்பதெல்லாம் கூட அனைவருக்கும் பொதுவானது, மேலானது, நடுநிலையானது, சார்பற்றது, முற்றும் முழுதானது என்பதெல்லாம் கூட உண்மையானதல்ல, மோசடித்தனமானது. ஆகவே, மக்கள் கண்காணிப்பகம் எதிர்பார்க்கும் தரும நியதிகளுக்கு புதிய ஜனநாயகம் கட்டுப்படவும் முடியாது.

சனநாயகம், சட்டம், சட்டத்தின் ஆட்சி, நீதி எல்லாம் சார்புநிலைக்கு ஏற்ப வளைக்கப்படுவதைப் போலவே, மக்கள் கண்காணிப்பகம் தனது மறுப்புரையில் ஒரு திரித்துப் புரட்டும் வேலையைக் காட்டியிருக்கிறது. மக்கள் காண்காணிப்பகத்தை அம்பலப்படுத்திய கட்டுரையில் ''தன்னை முற்போக்கு அமைப்பாகக் காட்டிக் கொண்ட நிறுவனம், மக்களின் பல்வேறு சிக்கலைத் தீர்த்து வைப்பதாகக் காட்டி கொண்ட இந்நிறுவனம் உலகமயமாக்கலை எதிர்ப்பதாகவும் காட்டிக் கொண்டது. இதை அறிந்த ஜெர்மனியைச் சேர்ந்த நிதி நிறுவனம் ஒன்று கடந்த மே மாதம் (22.5.05 முதல் 24.5.05) உதகையில் குன்னூருக்கு அருகில் உள்ள தியோடர் சர்ச்சில் மக்கள் கண்காணிப்பகத்தின் முழு நேரப் பணியாளர்களுக்கு உலகமயமாக்கலின் அவசியத்தை மூன்று நாள் முகாமாக நடத்தியுள்ளது. உலகமயமாக்கலை அவசியமாக ஆதரிக்க வேண்டும் என்பதே இந்த முகாமின் நோக்கம்'' என்று தான் புதிய ஜனநாயகம் எழுதியிருந்தது.

ஆனால், ''உலகமயமாக்கலை ஆதரிக்க வேண்டும் என்ற நோக்கில் நடத்தப்பட்ட கருத்தரங்கு பற்றி'' புதிய ஜனநாயகம் எழுதியதாக திரித்துக் கூறும் மக்கள் கண்காணிப்பகத்தின் மறுப்புரை (பக்.3) நான்கே வரிகள் தள்ளி ''நடந்ததாகச் சொல்லப்பட்ட கருத்தரங்கு பற்றி'' என்று எழுதுகிறது. கருத்தரங்கு மறுமுகாம் வேறு. ஜெர்மனியைச் சேர்ந்த நிதி நிறுவனம் மக்கள் கண்காணிப்பகத்தின் முழு நேர ஊழியர்களைக் கூட்டி ஒரு முகாம் நடத்தியது. அதில் உலகமயமாக்கலை எதிர்க்கக் கூடாது, ஆதரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அந்த முகாம் எங்கே, எப்போது நடந்தது என்பது தான் புதிய ஜனநாயகம் எழுதிய செய்தி. அப்படி ஒரு முகாம் நடந்ததா, அவ்வாறு அறிவுறுத்தப்பட்டதா இல்லையா, அது குறித்து ஹென்றி டிபேன் என்ன கருத்துச் சொன்னார்? இவைதான் முக்கியமான விசயம். இந்த விசயம் பற்றி மறுப்புரையில் எதுவும் சொல்லாமல், திரித்து மழுப்பித் திசை

**ஜெர்மனியைச்சேர்ந்த நிதி நிறுவனம் மக்கள் கண்காணிப்பகத்தின் முழு நேர ஊழியர்களைக் கூட்டி நடத்திய முகாம் எங்கே, எப்போது நடந்தது என்பது தான்புதிய ஜனநாயகம் எழுதிய செய்தி. இந்த விசயம் பற்றி மறுப்புரையில் எதுவும் சொல்லாமல், திரித்து மழுப்பித்திசைதிருப்பும் முயற்சியில் மக்கள் கண்காணிப்பகம் ஈடுபடுகிறது.**

திருப்பும் முயற்சியில் மக்கள் கண்காணிப்பகம் ஈடுபடுகிறது. அப்படி ஒரு முகாம் நடந்ததையும் எப்போது, எங்கே என்ற விவரத்தையும் புகைப்பட ஆதாரத்தோடு புதிய ஜனநாயகம் எழுதிய பிறகு. ''நடத்தப்பட்ட கருத்தரங்கு'', ''நடந்ததாகச் சொல்லப்பட்ட கருத்தரங்கு'' என்று முன்னுக்கு பின் முரண்பாடாக மக்கள் கண்காணிப்பகம் எழுதுவது ஏன்? மறைப்பதற்கு ஏதோ இருக்கிறது என்பதால்தானே!

இவ்வாறு மக்கள் கண்காணிப்பகத்துக்கு எதிராக புதிய ஜனநாயகம் எழுதியுள்ள அம்பலப்படுத்துதல்களின் மையக் கருத்தை மூடிமறைத்துவிட்டு அல்லது திரித்துப் புரட்டிப் போட்டுப் பொருளற்ற, குதர்க்கமான கேள்விகளை அடுக்கினாலே தகுந்த மறுப்புரை ஆகிவிடும் என்று அந்த அமைப்பு நம்புகிறது. கூலிக்குத் தொண்டு செய்யும் தன்னார்வம் கொண்டவர்கள் தானே!

சான்றாக, முசுலீம் அமைப்புகளைக் கேடாக மக்கள் கண்காணிப்பகம் பயன்படுத்திக் கொள்கிறது என்பது புதிய ஜனநாயகம் ஏடு எழுதிய மையக் கருத்து. இதை மறுப்பதற்குப் பதில் (மாறாக ஒப்புக் கொள்ளும் தகவலோடு) ஒரு விவரத் தவறை (ஜெனிவா கருத்தரங்கில் கலந்து கொண்டவர் பெயர் ஹைதர் அலி அல்ல, சவகருல்லா என்பதை) வைத்து வாதம் புரிகிறது, மக்கள் கண்காணிப்பகம். த.மு.மு.க. தலைவர் ஜெனிவா மனித உரிமை கருத்தரங்கில் கலந்து கொண்டதில் அதற்கான ஏற்பாடு செய்ததில் மக்கள் கண்காணிப்பகத்தின் பங்கு பற்றி புதிய ஜனநாயகம் எழுதியிருக்கிறது. தன் பயணம் பற்றி த.மு.மு.க. தலைவரே எத்தனையோ மேடைகளில் பேசியிருக்கிறார் என்ற தகவல் புதிய ஜனநாயகத்தின் கருத்தை எப்படி மறுப்பதாகிறது? மேலும், அவரது ஜெனிவா பயணத்தை மறைக்கப்பட்டது என்று பு.ஜ. எழுதவில்லை. இதுபோன்ற கண்துடைப்பு வேலைகள் மூலம் முசுலீம் மக்களின் உரிமைகளுக்குப் பாடுபடுவது போல மக்கள் கண்காணிப்பகம் காட்டிக் கொள்கிறது என்றுதான் பு.ஜ. எழுதியது; இது எப்படி பு.ஜ.வின் அங்கலாய்ப்பாகும்?

சித்திரவதைக்கெதிரான பிரச்சாரக் கூட்டமைப்பு நிகழ்ச்சிகளுக்கான நிதியை பங்கேற்கும் கட்சிகள் - அமைப்புகளிடமிருந்து பெறுவதாகக் காட்டிக் கொண்டு, அப்படி வசூலாகும் முன்பே மக்கள் கண்காணிப்பகம் தானே செலவு செய்கிறது; அதற்கான நிதி ஆதாரம் என்னவென்பதுதான் பு.ஜ. எழுப்பிய கேள்வி. கடந்த மூன்றாண்டு விவகாரம் பற்றி கேள்வி எழுப்பினால் ''தெரிந்தெடுக்கப்பட்ட'' 200 பேர்களிடம் தனது வரவு-செலவு விவரத்தை மூன்றாண்டுகளுக்கு முன்பே காட்டி விட்டதாக பதில் எழுதுகிறது.

''மக்கள் கண்காணிப்பகம் தவிர, 'சுதந்திரா', 'மனித உரிமை கல்வி நிறுவனம்' என்று பல பெயர்களில் தன்னார்வக் குழுக்களைத் தொடங்கி உற்றார் - உறவினர்களை, நண்பர்களை வைத்து பல பத்தாயிரக்கணக்கிலான தொகையை ஊதியம் என்ற பெயரில் சுருட்டிக் கொள்கிறார்கள்; அதே போலத்தான் வரவு-செலவிலும் செய்கிறார்கள் என்பது பு.ஜ.வின் குற்றச்சாட்டு.

இதற்கு குதர்க்கமான எதிர்க் கேள்வி கேட்டு நழுவிக் கொள்கிறது மக்கள் கண்காணிப்பகம். ''புதிய ஜனநாயகத்திற்கு மக்கள் கண்காணிப்பகம் எங்கிருந்து நிதியைப் பெறுகிறது என்று சொல்ல வேண்டும் என்ற அவசியமில்லை'' என்று மழுப்பிவிட்டு, ''மக்கள் கண்காணிப்பக இயக்குநரும் அவர் துணைவியாரும் வாங்கும் சம்பளம் பற்றிய செய்தியாலாவது கொஞ்சம் உண்மை கலந்திருக்கக் கூடாதா? கொள்கை ரீதியான விமர்சனத்தைத் தாண்டி தனிநபர்களை விமர்சிக்கும் அளவிற்கு புதிய ஜனநாயகம் தரம் தாழ்ந்து போகவேண்டுமா?'' என்று கேட்கிறது.

ஏகாதிபத்திய நிறுவனங்களிடமிருந்து நிதிபெற்றுக் கொண்டு ''தன்னார்வத் தொண்டு''' என்று கூறிக் கொண்டு கூலிக்கு மாரடிக்கும் கும்பல் கொள்ளை ரீதியான போராட்டத்துக்கு அழைக்கிறது. இவர்களின் செயல்பாடுகள் எப்படி நாட்டுக்கும் மக்களுக்கும் விரோதமானவை, துரோகமானவை என்று புதிய ஜனநாயகக் கட்டுரையில்

படிப்பகம்

www.padippakam.com

கோட்பாட்டு விளக்கம் தெளிவாகவே தரப்பட்டிருக்கின்றன. (பக்.26 ஜூலை 2005); இதில் போலி கம்யூனிஸ்டுக ளின் பங்கு-பாத்திரத்தையும் விளக்கி யிருக்கிறது.

இருந்தபோதும், புதிய ஜனநாயகத் திடம் ''ஒரு நிறுவனக் கோட்பாட்டை விமர்சனக் கண்ணோட்டத்தோடு விமர் சிக்கும் போக்கோ, நோக்கமோ இல்லை'' என்றும், ''தனிப்பட்ட வெறுப்பையும் பகையையும் வெளிப் படுத்துகிறது, தனிநபர்களை விமர்சிக் கிறது'' என்றும், ''தோழமையை, கூட்டு முயற்சியை, கூட்டு நடவடிக்கைகளை சாடுகிறது'' என்றும் எழுதி தங்களது பங்காளிகளையும் தன்னோடு சேர்த் துக் கொள்கிறது.

யாருடன், எந்த அமைப்புடன் தோழமை பாராட்டுவது, கூட்டு முயற்சி, கூட்டு நடவடிக்கைகளில் ஈடு படுவது என்பது குறித்து பு.ஜ. தெளிவா கவே இருக்கிறது. தன்னார்வக் குழுக் கள் என்பவை மக்கள் நண்பனைப் போல நடித்து, கண்துடைப்பு வேலை களை செய்து ஏய்க்கும் மக்கள் எதிரி கள் என்றே பு.ஜ. கணிக்கிறது. தற்போ தைய கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு அதை பாதுகாப்பது என்பது தான் தன்னார்வக் குழுக்களின், அவர்க ளின் தோழமை அமைப்புகளின் அடிப் படை நிலைப்பாடு. அதற்கு மாறாக, தற்போதைய கட்டமைப்பை தகர்ப்பது என்ற நோக்கோடு அதற்கு வெளியில் இருந்து செயல்படுவதுதான் புதிய ஜன நாயகத்தின் நிலைப்பாடு.

உலக வர்த்தகக் கழகத்தில் (W.T.O.) இருந்து நமது நாடு வெளியேற வேண் டும்; உலக வங்கி, ஐ.எம்.எஃப் போன்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களுடன் உள்ள உறவை முறித்துக் கொள்ள வேண்டும்; தனியார்மயம் - தாராளம யம் - உலகமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையை முறிய டிக்க வேண்டும் என்பதுதான் பு.ஜ.வின் நிலை. அதற்கு மாறாக, அவற்றுக்கெல்லாம் மனித முகம் கொடுக்க வேண்டும் என்பதுதான் தன் னார்வக் குழுக்கள் மற்றும் அவர்களின் தோழமை அமைப்புகளின் நிலை. இந்த நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட வைதாம் இவர்கள் பங்கேற்ற உலக சமூக மன்றம், உலக முன்முயற்சி, ஆசி ய மற்றும் உலக மக்கள் கண்காணிப் கம் போன்றவை. இதற்கான ஆதாரம் மக்கள் கண்காணிப்பகத்தின் மறுப் ரையிலேயே இருக்கிறது.

ஆனால், ஜனநாயகம், சட்டம், சட் டத்தின் ஆட்சி, நீதி என்பதெல்லாம் போலியானவை; வர்க்க சார்புடை யவை; அவற்றைத் தகர்த்து புதிய ஜன நாயகம் அடிப்படையிலான மாற்றுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்பதுதான் பு.ஜ.வின் நிலை.

இந்த அடிப்படை வேறுபாடுகளை அங்கீகரிக்க மறுத்து அல்லது மூடி மறைத்து பு.ஜ.விடம் தோழமையும் கூட்டு முயற்சியும் கூட்டு நடவடிக்கை யும் இல்லையென்று புளுகுகிறார்கள். இந்த அடிப்படை வேறுபாடு காரணமா கதான் அவர்களை பு.ஜ. எதிர்க்கிறதே, தவிர தனிநபர் பகை-வெறுப்பு என்ப தெல்லாம் அந்த அமைப்புகள் இட்டு கட்டும், பு.ஜ.வின் விமர்சனங்களுக்கு முகங்கொடுக்க மறுக்கும் அஞ்சும் வாதங்கள்தாம்.

**• ஆசிரியர் குழு**

---

**தலையங்கம் தொடர்ச்சி...**

மாற்று எரிசக்தியாக அணுசக்தி யைப் பெற்று, சுயசார்புத் தொழில் முயற்சியில் ஈடுபடும் நாடுகள் மீது அணுஆயுதத் தயாரிப்புகளைச் செய் வதாகப் பழிபோட்டு, தனிமைப்படுத் தும் முயற்சியையும் அமெரிக்கா மேற் கொண்டுள்ளது. இந்தியாவும் - பாக்.கும் இருதரப்புப் பகை காரண மாக அணுஆயுதத் தயாரிப்பில் ஈடு பட்டபோது, அது உலக நாடுகளுக்கே எதிரானது என்று மிரட்டிப் பணிய வைத்தது.

ஈரானில் அமெரிக்கக் கைக்கூலி ஷாவின் பாசிச மன்னராட்சியைப் புரட்சி நடத்தித் தூக்கியெறிந்த மத குரு மார்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய - சுயசார்பை இன்னமும் பேணுகின்ற னர். அதேபோல சோவியத் ஒன்றிய மும் சீனாவும் அமெரிக்க மேல்நிலை வல்லரசின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டபோதும், வடகொரியா அதற்கு அடிபணிய மறுக்கிறது. இவ் விரு நாடுகளும் சுயசார்பு நோக்கத் திற்கு அணுசக்தியை பயன்படுத்த செறிவூட்டப்பட்ட யுரேனியம் தயா ரிப்பு முயற்சிகளில் இறங்கியுள்ளன. ஈரான் 1974-இல் கையொப்பமிட் டுள்ள அணுஆயுதத் தடுப்பு ஒப்பந்தப் படியே அதற்கான உரிமை ஈரானுக் குண்டு.

ஆனால், அதையே அணுஆயுதத் தயாரிப்பு முயற்சி என்று புளுகி ஆக்கி ரமிப்புப் போர் தொடுக்க அமெரிக்கா எத்தணிக்கிறது. இதன் ஒரு பகுதியாக தான் உலக அணுஆயுதத் தடுப்பு ஒப் பந்தத்தை மீறி விட்டதாகவும் அந்நாட் டின் அணுசக்தி கட்டுமானங்களைப் பார்வையிடுவதற்கு ஒத்துழைக்க வில்லை என்றும் புகார் கூறி ஐரோப் பிய நாடுகளை முன்னிறுத்தி சர்வதேச அணுசக்தி முகாமை இயக்குநர் வாரி யத்தில் தீர்மானம் நிறைவேற்ற செய்தி ருக்கிறது. அமெரிக்கா, ஈராக்கில் பேர ழிவுப் பேராயுதங்கள் குவித்து வைத்தி ருப்பதாகப் புளுகி, ஐ.நா. மேற்பார் வையாளர்களை அனுப்பி நாடகமாடி ஆக்கிரமிப்புப் போர் தொடுத்ததைப் போன்றே, ஈரானுக்கு எதிராக போர் தொடுப்பதற்கு ஒரு முகாந்திரம் தேடிக் கொள்ளும் முயற்சிதான் இது. இம் முயற்சிக்கு மன்மோகன் சிங் கும்பல் துணை போகும் வகையிலே அத்தீர்மா னத்தை ஆதரித்து வாக்களித்திருக்கிறது.

மன்மோகன் சிங் கும்பலின் இச் செய்கை, இதுவரை இந்தியா பின்பற்றி வந்த கூட்டுச் சேராக் கொள்கையில் இருந்து விலகிப் போவதாகவும், ஈரா னில் இருந்து மலிவு விலையில் எண் ணெய் இறக்குமதி செய்யும் திட்டத் தைப் பாதிக்கும் என்றும் புலம்புகிறார் கள், எச்சரிக்கிறார்கள், போலி கம்யூ னிஸ்டுகள். புலம்புவதும், எச்சரிப் பதும் பின்னர் பா.ஜ.க. ஆதரவை காட்டி சரணடைவதுமே வழக்கமாக் கிக் கொண்டார்கள். ஆனால், இந்தியா வின் நிலை இத்தகையதாகத்தான் எப் பாதுமே இருந்து வந்திருக்கிறது. முன்பு சோவியத் ஒன்றியம், அமெ ரிக்கா இரண்டையும் மாறி மாறிச் சார்ந் திருந்த இந்தியா வெறுமனே கூட்டுச் சேராக் கொள்கை என்று நாடகமாடி வந் திருக்கிறது. குறிப்பாக, சோவியத் ஒன் றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, அமெரிக் காவின் ஒற்றைத் துருவ மேலாதிக்கத் துக்கு துணை போவதே - எந்த ஆட்சி நடந்தாலும் இந்தியாவின் நிலையாக இருக்கிறது.

இந்த விவகாரத்தில் குறிப்பிடத்தக் கது, மன்மோகன் சிங் கும்பலின் நம்ப வைத்துக் கழுத்தறுக்கும் துரோகத்தனம் தான். அதன் ஜூலை மாத அமெரிக்கப் பயணத்தின் போதே அந்நாட்டுடனான இராணுவ மற்றும் அணுசக்தி ஒப்பந் தங்களுக்கான பேரங்களின் போதே, ஈரானுக்கு எதிராக வாக்களிக்கும்படி யான அமெரிக்கக் கட்டளையை இந் தியா ஏற்றுக் கொண்டு விட்டது. ஆனால், ஓட்டெடுப்புக்கு முதல் நாளி ரவு வரை ஈரானை ஆதரிக்கப் போவ தாகக் கூறி கழுத்தறுப்பு வேலை செய்து விட்டது. நாட்டையே மறுகாலனியாக் கும் துரோகிகள், இத்தகு கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபடுவது வியப்புக்கு ரியதல்ல; வெறுக்கத்தக்கது!

•


படிப்பகம்

www.padippakam.com

-ஆம் பக்கத் தொடர்ச்சி

'ஒரு தாழ்த்தப்பட்டவனின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை குற்றவாளிக்கு மட்டுமல்ல; அவன் சார்ந்த சமூகம் முழுவதும் அந்த தண்டனையைச் சுமக்க வேண்டும்' என்று பகிரங்கமாக சாதி வெறியர்கள் கொக்கரிக்கிறார்கள்.

இந்து சாதிவெறியர்களுக்கு எதிராக ஒரே ஒரு தாழ்த்தப்பட்டவர் போராட்டத்தில் இறங்கினாலும் உடனடியாக அடிமைக்கால தண்டனைகளை ஏவி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை மொத்தமாகப் பழிதீர்க்கிறார்கள், உயர் சாதி வெறியர்கள். இதற்கு சமீபத்திய உதாரணம், ஒரிசா மாநிலத்தில் பூரி மாவட்டம், புபன்பதி என்ற கிராமத்தில் செப்டம்பர் 19-ந் தேதி நடந்த குரூரம்!

கண்டாயித் என்ற இந்து ஆதிக்கச் சாதி திருமணத்தில் மாப்பிள்ளையின் காலை கழுவும் அடிமை வேலையை செய்ய மறுத்த தாழ்த்தப்பட்டோரைத் தண்டிக்க, அக்கிராமத்தில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட பெண்கள் அனைவரையும் நிர்வாணமாக்கி நடத்திச் சென்றனர் இந்து சாதிவெறியர்கள்.

ஆட்சி அதிகாரத்தை அதன் அடிவரை சுவைக்கும் ஆதிக்க சாதிவெறியர்களுக்கு தாழ்த்தப்பட்டோர் மனிதர்களே அல்ல! எனவே, சக மனிதர்கள் அனுபவிக்கும் எந்த உரிமையும் அவர்களுக்கு இல்லை. அதுமட்டுமல்ல, இந்திய அரசியல் சட்டம் வழங்கும் இடஒதுக்கீட்டு 'சலுகை'கள் கூட அவர்கள் அனுபவிப்பதை மேல்சாதி வெறியர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

கோஹனா நகரத்தின் வர்த்தக மையத்தில் மாடி வீட்டில் வாழ்ந்து கொண்டு, கலர் டி.வி. பார்த்துக் கொண்டு, மோட்டார் பைக்கில் பறந்து கொண்டு, 'லேப்-டாப்' கம்ப்யூட்டரைத் தட்டிக் கொண்டு, கூடவே தங்களை 'தலித்' என்று கூறிக் கொண்டு இடஒதுக்கீட்டைப் பெற்று அரசு வேலையில் சேர்ந்து விடுகிறார்கள். சமயத்தில் வெளி நாட்டுக்கும் பறந்து விடுகிறார்கள்; என்ற 'பொச்சரிப்பை' பரப்பித்தான் தாழ்த்தப்பட்டோரின் சொற்ப சொத்துக்களையும் தீவைத்து கொளுத்தினார்கள், ஜாட் சாதிவெறியர்கள்.

ஆனால், கோஹனா நகரத்து தலித்துகள், சினிமா கழிசடைகள் போன்றோ, ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள் போன்றோ அல்லது கந்து வட்டி, மணல் திருட்டு, கள்ளச்சாராயம் காய்ச்சும் திடீர் பணக்கார பொறுக்கிகள்



நாளுக்குநாள் அதிகரித்து வரும் ஆதிக்க சாதிவெறியர்களின் தாக்குதலைக் கண்டித்து தாழ்த்தப்பட்டோர் நடத்தும் ஊர்வலம்.

போன்ற கூட்டம் அல்ல. கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக அந்நகரத்தில் அவர்கள் செலுத்திய கடுமையான உழைப்பும், கட்டுப்பாடான வாழ்க்கை முறையும் தங்களின் குழந்தைகளின் கல்விக்காகவும் எதிர்கால வாழ்க்கைக்காகவும் மிக நீண்டகாலத்திற்குத் திட்டமிடும் அவர்கள் பாங்கும் அவர்களை இந்த நிலைக்கு உயர்த்தியிருக்கிறது.

பணம் படைத்த ஜாட் ஆதிக்க சாதி கும்பல்களே இவர்களைக் கண்டு மிரளும் அளவுக்கு தங்களுக்குள் ஒன்றுபட்டு, பலம் பொருந்திய அமைப்பாக திரண்டு ஜாட் ஆதிக்க சாதியினரின் ஒடுக்குமுறைகளை முளையிலேயே கிள்ளி எறிகிறார்கள். இங்கு ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு தலைமுறை நபர்களும் ஒரு படி முன்னேற்றத்தில் நிற்கிறார்கள். தாத்தா, நகராட்சியில் தெரு கூட்டுபவர்; அப்பா, ரயில்வேயில் எழுத்தர்; மகன், எம்.சி.ஏ., மாணவன், கூடுதலாக பகுதிநேர வேலையில் வருமானம். பிள்ளைகள் பெரும்பாலும் இளங்கலை பட்டப்படிப்பு முடித்தவர்களாகவும், ஏதாவது ஒரு தொழிற்பயிற்சியில் தேர்ச்சி அடைந்தவர்களாகவும் வளர்கிறார்கள். தாத்தா பார்க்கும் தெருக்கூட்டும் வேலையை வரும் தலைமுறையினர் இனிமேலும் தொடரக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

தாழ்த்தப்பட்டோர் என்றால் உதிரிகள், தலைசொறிந்து நின்று மீதம்-மிச்சத்தை வாங்கிக் கொள்பவர்கள், பிறரின் கருணைக்கு ஏங்குபவர்கள் என்ற ஆதிக்க சாதியினரின் சித்திரத்தை நிர்மூலமாக்குகிறார்கள். கோஹனா நகரத்தில் உருக்கு போன்ற அமைப்பாக திரண்டு இருக்கும் உழைக்கும் தாழ்த்தப்பட்டோரைக் கண்டு தீக்குள் விரலை விட்டவர்கள் போல் நடுங்குகிறார்கள், ஜாட் ஆதிக்க சாதிவெறியர்கள்.

கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருவதும் ஏவிய வேலையை செய்து முடிப்பதும் அதிகபட்சம் போனால், ஆடு-மாடுகள் போல் அடிமை வேலைக்குப் படைக்கப்பட்டவர்கள்தான் 'தாழ்த்தப்பட்டோர்' என்ற உயர்சாதி திமிர் கோஹனா நகரத்து தாழ்த்தப்பட்டோரிடம் செல்லுபடியாகவில்லை.

"கோஹனா நகரத்து 'தாழ்த்தப்பட்டோர் வளமான எதிர்காலத்தைப் பற்றி கனவுகள் காண்பது குற்றம்! அவர்களுக்கு சொத்துக்கள் இருப்பது குற்றம்' அவர்களுக்கு சுயமரியாதை - தன்மானம் இருந்தால் பெருங்குற்றம்! அவர்கள் மனிதர்களாக அல்ல, மனிதர்கள் மாதிரி நடந்துக் கொண்டாலே அது மன்னிக்க முடியாத குற்றம்!" என்று கொக்கரிக்கிறது, ஜாட் ஆதிக்க சாதிவெறி கும்பல்.

இன்று நேற்றல்ல, இரண்டாயிரம் ஆண்டுகாலமாக இந்த உயர்சாதி இறுமாப்பில்தான் தாழ்த்தப்பட்டோரைக் கொளுத்திக் கொண்டிருக்கிறார்கள் - ஆதிக்க இந்துசாதி வெறியர்கள். இதற்கு முடிவுகட்ட ஆதிக்க சாதிவெறியர்களின் வழியிலேயே அவர்களுக்கு நாம் பாடம் புகட்டுவோம்! ஜாட் ஆதிக்க சாதிவெறி கும்பலைத் தனிமைப்படுத்த வாக்குரிமை உள்பட அனைத்து சிவில் உரிமைகளையும் அக்கும்பலுக்கு ரத்து செய்யுமாறு தெருப் போராட்டங்களை கட்டவிழ்த்து விடுவோம்.

• குணசேகரன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and
... EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

PUTHIYA
REGISTE
REGISTRAR OF NE
FOR INDIA UNDER NO.
Regn.No.TN/PMG(CCR)/621




படிப்பகம்